# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 14 வியாழக்கிழமை (31-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:338


## அச்சம், அவசரம் வேண்டாம்; குழம்பாதீர்கள்! குழப்பாதீர்கள்!!

# முஸ்லிம்களுடன் இணக்கம் கண்டே தீர்வுக்கான திட்டம் தயாரிக்கப்படும்!

## உறுதியளிக்கின்றார் பாலசிங்கம் விமானத்தில் உதயனுக்குப் பேட்டி

- கதே பசிபிக் விமானத்திலிருந்து ந.வித்தியாதரன் -

கொழும்பு,ஒக்ரோபர்31

**முஸ்லிம்கள் அச்சம் கொள்ளவோ, அவசரப்படவோ தேவையில்லை. சிலர் தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி வருகிறார்கள். எல்லோருக்கும் ஒன்றைச் சொல்லிவைக்க விரும்புகிறேன். அரசும் புலிகளாகிய நாமும், முஸ்லிம்களும் முத்தரப்பாக இருந்து பிரச்சினைகள் பற்றிப் பேசி முஸ்லிம்களின் இணக்கம் கண்டே தீர்வுத் திட்டம் தயாரிக்கப்படும்.**

**இப்படி உறுதிபடக் கூறினார் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியரும் தாய்லாந்துப் பேச்சுக்களில் புலிகள் தரப்புத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம்.**

நேற்று புதன்கிழமை அதிகாலை இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காகத் தமது குழுவினருடன் 'கதே பசிபிக்' விமானத்தில் சென்றபோது விமானத்தில் வைத்தே 'உதயன்' செய்தியாளருக்கு அன்ரன் பாலசிங்கம் பிரத்தியேகமாக விசேட பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியிலேயே முஸ்லிம்களுக்கான மேற்படி விசேட செய்தியை அவர் தெரிவித்தார்.

தமது பேட்டியில் பாலசிங்கம் மேலும் கூறியதாவது :-

முஸ்லிம் தலைவர்கள் மத்தியில் இப்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலை குறித்து வேதனையடைகின்றோம்.

முஸ்லிம் மக்களுக்கு நியாயமான

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாவது சுற்றுப் பேச்சு தாய்லாந்தில் நடக்காது!

பாங்கொக்,ஒக்.31

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே டிசெம்பரில் இடம்பெறவுள்ள மூன்றாவது சுற்று சமாதானப் பேச்சுக்கள் தாய்லாந்தில் நடைபெற மாட்டாது என்றும் -

பெரும்பாலும் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிலேயே அந்தப் பேச்சுக்கள் இடம்பெறும் என்றும் -

ஒஸ்லோ வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

பேச்சு நிரலின்படி மூன்றாவது சுற்றுப் பேச்சு டிசெம்பர் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. ஆனால், அந்தக்காலப் பகுதியில் தாய்லாந்து நாட்டில் அந்நாட்டு மன்னரது பிறந்த தினம் மற்றும் குடியரசு தினக் கொண்டாட்டங்கள் இடம்பெறவிருக்கின்றன. அந்தச் சமயத்தில் இலங்கை சமாதானப் பேச்சுக்களை அங்கு நடத்துவது பாதுகாப்பு மற்றும் வேறு காரணங்களுக்காக சாத்தியமல்ல என்று அந்நாட்டு அரசு

(14ஆம் பக்கம் பார்க்க)


**உள்ளே**

- தாய்லாந்து செல்லும் விமானத்தில் வைத்து உதயனுக்கு பாலா அளித்த பேட்டி.
- கொழும்பு மண்ணில் கால் பதித்த புலிகள்.
- வலி.வடக்கு மக்களின் பேரணி.
- தொழில்நுட்பக் கல்லூரி மாணவரின் ஆர்ப்பாட்டம்.

விவரமான செய்திகள், படங்கள்.


## ஒஸ்லோ உதவி வழங்கும் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் செய்வதே முக்கிய நோக்கம்

### தாய்லாந்து புறப்படமுன் அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு,ஒக்.31

ஒஸ்லோவில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் முன்வைக்க வேண்டிய விடயங்களைத் தயார்படுத்துவதே தாய்லாந்தில் நடைபெறும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின் முக்கிய நோக்கமாகும்.

தாய்லாந்துப் பேச்சுக்களில் பங்குபற்றும் அரசாங்கக் குழுவின் தலைவரான அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து தாய்லாந்துக்குப் புறப்படுமுன் இவ்வாறு கூறினார்.

"சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச ரீதியில் பெரும் ஒத்துழைப்புக் கிடைத்திருக்கிறது. அந்த ஒத்துழைப்பைப் பயன்படுத்தி நிதி உதவிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் பேச்சுக்களின் மூலம் செய்யப்படும். இதற்கென கூட்டுச் செயலணி அமைப்பது குறித்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் மிலிந்த, ஹக்கீம் இன்று பாங்கொக் போய்ச் சேருவர்

கொழும்பு,ஒக்.31

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் சுற்று சமாதானப் பேச்சுக்கள் இன்று தாய்லாந்தில் ஆரம்பமாகின்றன.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அனைவரும்

(14ஆம் பக்கம் பார்க்க)

### மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி

## வலி.வடக்கு மக்கள் நேற்று பெரும் பேரணி

யாழ்ப்பாணம்,ஒக்.31

வலிகாமம் வடக்குப் பகுதிகளில மக்களை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் என்று கோரி மல்லாகத்தில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்தப் பேரணியின் இறுதியில் பொதுக் கூட்டமும் இடம்பெற்றது.

மல்லாகம் பழம்பிள்ளையார் ஆலய முன்றிலில் இருந்து முற்பகல் 10.45 மணிக்கு பேரணி ஆரம்பமானது. பெண்களும் மாணவர்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

பேரணி ஆரம்பமான இடத்தில் இருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள வலி.வடக்குப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்ததும் பேரணி நிறைவடைந்தது. அங்கு எழுச்சிக் கூட்டம் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அ.விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம், என்.

(14ஆம் பக்கம் பார்க்க)



தாய்லாந்து சென்ற விமானத்தில் பாலா, ஜீ.எல்.பீரிஸ், அடேல் பாலசிங்கம்....

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

# அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு ஸ்திரமான அரசும் புதிய அரசமைப்பும் தேவை

## விமானத்தில் வைத்து 'உதயன்' பிரதிநிதிக்கு பாலா பேட்டி

**தாய்லாந்தில் இன்று ஆரம்பமாகும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்துகொள்ளச் சென்றுள்ள புலிகள் தரப்புக் குழுவுக்குத் தலைமை வகிக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்து செல்லும் வழியில் விமானத்தில் வைத்து 'உதயன்' விசேட பிரதிநிதிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின் முழுமையான விவரம் இங்கே தரப்படுகின்றது.**

அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துத்தான் முதலில் பேசவேண்டும் என்று ஜனாதிபதி குமாரதுங்க திரும்பத் திரும்பக் கூறுகின்றார். அவர் குறிப்பிடும் அடிப்படைப் பிரச்சினைகள் எவை என்பதை அவர் இன்னும் தெளிவுபடுத்தவில்லை.

எம்மைப் பொறுத்தவரை அடிப்படைப் பிரச்சினைகள் என்னென்ன என்பதை நாம் தெளிவுபடுத்தியுள்ளோம். தமிழரின் தேசிய பிரச்சினை, சுயநிர்ணய உரிமை, தமிழர் தாயகக் கோட்பாடு, தமிழரின் பாதுகாப்பு இவையெல்லாம் அதில் அடங்கியுள்ளன. இந்த விடயங்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டை பலதடவைகள் தெளிவுபடுத்திவிட்டோம். எம்மைப் பொறுத்தவரை அவைதான் அடிப்படைப் பிரச்சினைகள்.

இந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இப்போதுள்ள அரசமைப்பின கீழ் தீர்வுகாண முடியாது. இப்போதைய அரசமைப்பு ஒற்றையாட்சி, பௌத்த மதத்தை மட்டும் பேணுதல் போன்ற பல்வேறு மாற்ற முடியாத அம்சங்களைக் கொண்டுள்ளது. எக்காரணம் கொண்டும் அந்த அரசமைப்பின் அத்தகைய ஏற்பாடுகளை மாற்றியமைக்க முடியாதென்று அந்த அரசமைப்பே கூறுகின்றது.

**அரசமைப்பு இடந்தராது**

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதானால் ஒற்றையாட்சிக்கு அப்பால் கூட்டாட்சி, சமஷ்டி ஆட்சி, பிராந்தியங்களின் ஆட்சி என்று ஏதேனும் ஒன்று பற்றி நாம் சிந்திக்க வேண்டியிருக்கும். தமிழரின் தாயகம், பாதுகாப்பு போன்றவற்றை உறுதிப்படுத்த வேண்டியிருக்கும் அவற்றையெல்லாம் செய்வதற்கு இந்த அரசமைப்பு இடம் கொடுக்காது.

ஆகவே, நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தற்போதைய அரசமைப்பை மீறி, புறந்தள்ளி, புதிய அரசமைப்பை - அரசியல் முறைமையை (Political setup) நாம் உருவாக்க வேண்டியுள்ளது. அடிப்படைப் பிரச்சினைகள் மூலம் நாம் கூறுகின்ற தீர்வு அப்போதுதான் உருப்பெறமுடியும்.

ஆனால், இங்கு தற்போதைய அரசமைப்பில் ஒரு சிறிய மாற்றத்தைக் கூட செய்யமுடியாத நிலையில் அரசு தள்ளாடுகின்றது. இந்த அரசு எப்படி அரசமைப்பை அடியோடு புறந்தள்ளி, மாற்றி புதிய அரசியல் முறைமையை ஏற்படுத்தப்போகின்றது.

**ரணில் அரசின் ஆர்வம்**

ரணிலின் அரசுக்கு இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண வேண்டும் என்ற உண்மையான ஆர்வம் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதன் நேர்மையை நாம் சந்தேகிக்கவில்லை. ஆனால், தன்னுடைய அரசமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகளையே முன்னகர்த்த முடியாத ஸ்திரமற்ற நிலையில் அது இருக்கின்றது. தென்னிலங்கையில் தற்போது நிலவி வரும் அரசியல் குழப்பங்கள், கொந்தளிப்புக்கள் வேறு நம்மைக் கவலை கொள்ள வைக்கின்றன.

ஆகவே, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அடிப்படைப் பிரச்சினைகளை நாம் பேசுவதாயின், அந்தப் பேச்சு மூலம் எட்டப்படக்கூடிய தீர்வை நடைமுறைப்படுத்தக்கூடிய ஸ்திரமான அரசு தெற்கில் இருக்கவேண்டும். அப்படியில்லாத அரசுடன் நாம் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து பேசி என்ன பயன்?

**மக்களின் அன்றாடப் பிரச்சினைகள்**

அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றி பேசமுடியாது என்பதற்காக நாம் வாளாவிருந்துவிட முடியாது. அதனால் மக்களின் அன்றாடப் பிச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

ஆனால், அன்றாடப் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதோடு நாம் அமர்ந்துவிடவில்லை. அன்றாடப் பிரச்சினைகளை ஏதோ ஒரு கட்டத்தில் நாம் பேசித்தான் ஆக வேண்டும். அதிலும் எமது கவனத்தைச் செலுத்துகின்றோம்.

என்றாலும், அப்படி நாம் பேசுவதை முன்னெடுக்கக்கூடிய அரசு தெற்கில் அமைவதை சிங்களவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

பேச்சில் பங்குபற்றும் தமிழர் தரப்பு ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட்டு - ஒரு குரலில் - ஒரே பிரதிநிதிகள் மூலம் பேசுகின்றது.

ஆனால், அரசுத் தரப்பு அந்த நிலையில் இல்லை. அரசு ஒருபக்கம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருபக்கம், பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இழுபறி இப்படி இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கும் அரசுடனோ அல்லது ஜனாதிபதியுடனோ நாம் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து எப்படிப் பேசுவது? அதனால் என்ன லாபம்? ஆகவே தெற்கில் அரசியல் உறுதிப்பாட்டை - ஸ்திரமான அரசை ஸ்தாபிக்க சிங்கள மக்கள் முன்வரவேண்டும்.

**பேச்சில் புலிகளின் ஈடுபாடு**

*கேள்வி:-* தெற்கில் ஒரு தேர்தல் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படித் தேர்தல் நடந்து அரசு மாறினால் தற்போதைய பேச்சுக்கள் தொடருமா? எந்த அரசுடன் பேச்சு நடத்துவதை நீங்கள் விரும்புகின்றீர்கள், ரணில் அரசுடனா? சந்திரிகா அரசுடனா?

*பாலா:-* சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். ஆனால், சமாதானத்துக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் அக்கறை வைத்திருக்கும் அரசுடன் பேசுவதையே நாம் விரும்புகின்றோம். எந்த அரசையும் பெயர் சுட்டிக் குறிப்பிடாமல் இப்படிப் பொதுப்படையாகவே பதில் தர விரும்புகின்றேன்.

விடுதலைப் புலிகளின் அரசியல் மற்றும் இராணுவப் பிரிவுகளைச் சேர்ந்த உயர் தலைவர்கள் இந்தப் பேச்சுக்களில் முதற்றடவையாக பங்குபற்றுவதற்கு வருகின்றனர். தங்களுக்கு நேரக்கூடிய உயிராபத்து மற்றும் இடைஞ்சல்களுக்கு மத்தியிலும கொழும்பு ஊடாக பயணித்து இப்பேசுக்களில் பங்குபற்ற வருவது அமைதிப் பேச்சுக்களில் புலிகளுக்கு உள்ள அதீத ஈடுபாட்டை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

**பிரபாகரனின் உறுதி**

தெற்கில் ஏற்பட்டுள்ள அரசமைப்பு ரீதியான நெருக்கடிகள், அரசியல் குழப்பங்கள், அரசின் ஸ்திரத் தன்மை பாதிப்பு ஆகியவற்றுக்கு மத்தியிலும இந்தச் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் தலைவர் பிரபாகரன் உறுதியாக இருக்கின்றார்.

தற்போதைய சமாதான முயற்சிகளால் மக்கள் மத்தியில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கில் பொருளாதார நடவடிக்கைகள் மும்முரமாகி உள்ளன. அமைதியான - தளர்வான- சூழ்நிலை காணப்படுகின்றது. அமைதி முயற்சிகளைத் தொடரலாம் என்ற நம்பிக்கை புலிகளின் தலைமைக்கு ஏற்பட்டுள்ளது.

**இரண்டு முக்கிய விடயங்கள**

இந்த இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களில் இரண்டு முக்கிய விடயங்களை உறுதி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

ஒன்று - புனரமைப்பு, புனர்வாழ்வுக்கான கூட்டுச் செயலணி அமைத்தலும் அதன் நடவடிக்கைகள், செயற்பாடுகளை வகுத்தலும்.

மற்றையது - உயர் பாதுகாப்பு வலயங்களினால் எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கான - அரச இராணுவ மற்றும் புலிகள் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைத்தல்.

யாழ். குடாநாட்டில் மட்டும் மக்களின் வாழ்விடத்தில் 35வீதம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சம் மக்கள் தங்கள் வாழ்விடங்களில் இருந்து விரட்டப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான - நிலையான - தீர்வு காணப்படவேண்டியது அவசரமானது, அவசியமானது. (ம)

# மக்கள் பிரதிநிதிகள் குழு நேற்று நாகர்கோவிலுக்கு!

வடமராட்சி,ஒக்.31

பொதுமக்கள் பிரதிநிதிகள் 10 பேர் நேற்று படையினரால் நாகர்கோவில் பிரதேசத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

குடத்தனை சிவில் நிர்வாக அலுவலகத்திலிருந்து நேற்று முற்பகல் 10.00 மணியளவில் இவர்கள் நாகர்கோவில் பகுதிக்குக் கூட்டிச்செல்லப்பட்டனர்.

சுமார் இரு மணி நேரம் அங்கு தங்கி நின்று இடங்களைப் பார்வையிட இவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

பூர்வீக நாகதம்பிரான் ஆலயம், மற்றும் தேவாலயம் ஆகியன சேதமின்றிக் காணப்படுவதாகவும்,

படையினர் நிலைகொண்டுள்ள சில வீடுகள் தவிர ஏனைய வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்து காணப்படுவதாகவும்-

அங்கு சென்று திரும்பியோர் தெரிவித்தனர்.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத நாகர்கோவில் பிரதேசத்துக்கு, பொதுமக்களின் பிரதிநிதிகள் சென்றுவர அனுமதிக்கப்படும் என்று யாழ். செயலகத்தில் நேற்றுமுன்தினம் கூட்டப்பட்ட உயர் மாநாட்டில் படை அதிகாரிகள் உறுதியளித்திருந்தது தெரிந்ததே. (ஐ-173)

# ஹக்கீம் தாய்லாந்து செல்வதற்கு மு.கா.அரசியல்பீடம் அங்கீகாரம்

## புறப்படுமுன் பிரதமரைச் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,ஒக்.31

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்துகொள்வதற்கான அங்கீகாரத்தை முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் அரசியல்பீடம் வழங்கியது.

நேற்றுமுன்தினம் இரவு முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் அர்சியல்பீட கூட்டம் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது. அமைச்சரின் இல்லத்தில் மாலை 5 மணிக்கு ஆரம்பமான இக்கூட்டம் இரவு 10.30மணிவரை தொடர்ந்து நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போது கிழக்கு மாகாண எம்.பிக்களின் நாடாளுமன்ற பகிஷ்கரிப்பு, அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக நீண்டநேரம் ஆராயப்பட்டது. அதையடுத்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் தாய்லாந்து செல்லுமுன் பிரதமரிடம் சில விடயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி அமைச்சர் ஹக்கீம் நேற்று பிரதமரைச் சந்தித்துப் பேசினார்.

இதற்கிடையே, முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியாளர் குழுவில் ஒருவரான அன்வர் இஸ்மாயில் எம்.பி பிரதமரால் முன்வைக்கப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கான ஆலோசகர் குழு, யோசனை தமக்குத் திருப்தியளிக்கவில்லை எனக் கூறியிருக்கிறார்.

தேசிய பிரச்சினைகள் தொடர்பாக தீர்வு குறித்தே தாய்லாந்தில் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. எங்களுடைய கோரிக்கை முற்றிலும் உள்நாட்டுப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாகும். இதனை நேர்வே நாட்டுப் பிரதிநிதிகளும் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

எனவே, எமது கோரிக்கை தொடர்பாக பிரதமர் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். அதுவரை எங்களுடைய நாடாளுமன்றப் பகிஷ்கரிப்புத் தொடரும் என்றும் அன்வர் இஸ்மாயில் எம்.பி. கூறினார். (ம-4)

# ஈழத்து எழுத்தாளரின் தரவுகள் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.31

லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள "நூல் தேட்டம்" நூலின் ஆசிரியர் என்.செல்வராஜா தனதுநூலின் இரண்டாவது பதிப்பில் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் விவரங்களைச் சேர்த்துக்கொள்வதற்கான தரவுகளைத் திரட்டிவருகிறார்.

இது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் ஈழத்து நூல் வெளியீட்டாளர் ச'r அனைவரையும் கலந்துகொள்ளுறு யாழ்.பொது நூலக ஒருங்கிணைப்புக்குழுவினர் தெரிவித்திருக்கின்றனர். லண்டன் செல்வராஜாவின் ஈழத்து எழுத்தாளர்களின் 1000 நூல்களைப் பற்றிய 'நூல் தேட்டம்', 'யாழ்ப்பாண நூலகம் - ஓர் ஆவண காப்பகம்' ஆகிய நூல்களின் அறிமுகவிழா கடந்த 26ஆம் திகதி கொழும்பில் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்றது.

'நூல் தேட்டம்' இரண்டாவது தொகுதியில் வெளியிடுவதற்காக ஈழத்து எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை இவரிடம் நேரில் கையளிக்கலாம்.

(ஐ-ரி)

## 350 குடும்பங்களுக்கு கொடுப்பனவு

தென்மராட்சி,ஒக்.31

பளை பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களில் 350 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவான 15 ஆயிரம் ரூபா விரையில் வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வுப் பிரிவு, திட்டமிடல் பிரிவு ஆகியவற்றின் உத்தியோகத்தர்களால் பார்வையிடப்பட்டு சிபார்சு செய்யப்பட்ட - நிரந்தரமாகக் குடியேறியுள்ள - 350 குடும்பங்களுக்கே இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# அக்கரைப்பற்று கடத்தல் நாடகம்; 2 இளைஞர்கள் இன்று நீதிமன்றில்

இம்மாத நடுப்பகுதியில் அக்கரைப்பற்றில் ஏற்பட்ட குழப்ப நிலைக்குக் காரணமான இரு இளைஞர்கள் இன்று வியாழக்கிழமை அக்கரைப் பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்படவுள்ளனர்.

கடத்தப்பட்டார் என்று கூறப்பட்ட அப்துல் வஜித் மற்றும் அந்தச் சம்பவத்துக்கு உதவினார் என்று கூறப்படும் றமீஸ் ஆகியோர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த 14 நாள்களாக விளக்கமறியலில் உள்ளனர்.

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் எம்.ஐ.எம். இர்ஸதீன் முன்னிலையில் இவர்கள் இருவரும் ஆஜர்செய்யப்பட்டிருந்தனர்.

கடத்தல் நாடகத்தில் ஈடுபட்டிருந்த இரு இளைஞர்களது விசாரணையை கொழும்பிலிருந்து வந்த சி.ஐ.டியினர் மேற்கொண்டிருந்தனர்.

உள்நுறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட்டிற்கும் பொலீஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவிற்கும் சி.ஐ.டி பொலீஸாரின் விசாரணை அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாரம் சட்டமா அதிபர் சி.கமல சபேசனுக்கு மேற்படி விசாரணை அறிக்கையை சி.ஐ.டியினர் சமர்ப்பிப்பர். அதன் பின்பு சட்டமா அதிபரிடமிருந்து சட்ட ஆலோசனை பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரஸ்தாப இரு இளைஞர்களது விசாரணைக்குப் பொறுப்பாக சி.ஐ.டி பிரிவின் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் கிளமன் டி. சில்வா செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம)

# மாலைதீவு கடலில் மீன்பிடிக்க இலங்கை மீனவருக்கு அனுமதி?

இலங்கை மீனவர்கள் மாலைதீவு கடலில் மீன்பிடிப்பதில் ஈடுபட அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது குறித்து பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

இலங்கைக்கு வருகை தந்திருக்கும் மாலைதீவு பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அப்துல் சத்தார், இலங்கை மீன்பிடி, நீரியல் வள அமைச்சர் மஹிந்த விஜேசேகரவுடன் இப்பேச்சுக்களை நடத்தினார்.

நேற்றுமுன்தினம் மீன்பிடி அமைச்சில் இப்பேச்சுக்கள் நடைபெற்றன.

மாலைதீவிலிருந்து கடலில் 75 மைல் தூரத்தில் மீன்பிடிக்க இலங்கை மீனவருக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். இலங்கை மீன்பிடி வள்ளங்கள் மாலைதீவின் கடல் பொருளாதார வலயத்தை ஊடறுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் சட்டத் தடை நீக்கப்படவேண்டும் என்று அமைச்சர் விஜேசேகர கேட்டுக்கொண்டார்.

மீன்பிடி அனுமதி தொடர்பாக வர்த்தக அமைச்சுடன் பேச்சு நடத்தி நடவடிக்கை எடுப்பதாக மாலைதீவு அமைச்சர் உறுதியளித்திருக்கிறார். (ம)

# கொழும்பு மண்ணில் கால்பதித்த புலிகள்!

கொழும்பு,ஒக்.31

தாய்லாந்தில் நடைபெறும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் கலந்து கொள்ளும் புலிகள் குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பில் கால்பதித்தனர்.

கட்டுநாயக்காவில் நேற்று அதிகாலை விமானம் ஏறித் தாய்லாந்துக்குச் செல்வதற்காகக் குழுவினரை அழைத்துவர விமானப்படையின் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் வன்னிக்குச் சென்றன.

இரண்டு ஹெலிக்கொப்டர்களும் புலிகள் குழுவினரை ஏற்றிக்கொண்டு செவ்வாய் மாலை 6மணியளவில் கொழும்பில் வந்து இறங்கின. புலிகள் பல வருடகால இடைவெளிக்குப பின்னர் கொழும்பில் கால்பதித்தனர்.

ஹெலிகளிலிருந்து புலிகள் இறங்கியதும் நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட் போர்க்கின் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அங்கே இரவு விருந்து அருந்தி இளைப்பாறிவிட்டு இரண்டு வாகனங்களில் கொழும்பு மாநகர வீதிகள் ஊடாக கட்டுநாயக்கா விமானநிலையத்தை அதிகாலை 2.25 மணிக்குச் சென்றடைந்து அங்கே எந்த இடத்திலும் தங்காமல் நேரடியாகச் 'கதே பசிபிக்' விமானத்தில் ஏறினர்.

அரசுத் தரப்புக்குழுவின் பிரதிநிதிகளான அமைச்சர்கள் மிலிந்த மொறகொடவும் ரவூப் ஹக்கீமும் இந்த விமானத்தில் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவர்கள் இருவரும் விமானம் ஏறவில்லை. அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மட்டும் விமானத்தில் 'பிஸ்னஸ்' (Business Class) பகுதியில் முன் வரிசையில் ஒதுக்குப்புறமாக இருந்த ஆசனத்தில் தனியாக அமர்ந்திருந்தார்.

பயணத்தின் மத்தியில் அமைச்சர் பீரிஸ் எழுந்துவந்து அதே 'பிஸ்னஸ் கிளாஸ்' பின்புறப் பகுதியில் ஒன்றாக அமர்ந்திருந்த புலிகளின் பிரதிநிதிகளிடம் சென்று குசலம் விசாரித்துச் சென்றார். பின்னர் அன்ரன்பாலசிங்கம் எழுந்து முன்னே சென்று பீரிஸுக்கு பக்கத்து ஆசனத்தில் அமர்ந்து அரைமணி நேரம் அவரோடு தனியாக உரையாடினார். (ம)





பேச்சுக்கு புறப்படமுன் வன்னியில் தலைவர் பிரபாவுடன் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள்.

## நிரந்தரக் கட்டடம் அமைக்க காணி வேண்டும்:

# உயர் தொழில் நுட்ப மாணவர்கள் நகரில் நேற்று கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம்,ஒக்.31

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்குச் சொந்தக் கட்டடம் அமைபதற்கு இதுவரையும் காணி இல்லாததைக் கண்டித்து அங்கு கற்கும் மாணவர்கள் நேற்று நகரில் கண்டனப் பேரணியொன்றை நடத்தினர்.

திருநெல்வேலிப் பகுதியில் -தற்பொழுது நிறுவனம் இயங்கி வருகின்ற தற்காலிக கட்டடம் அமைந்துள்ள பகுதியில் - இருந்து நேற்று முற்பகல் 10.45 மணியளவில் பேரணி ஆரம்பமானது. நிறுவனத்தில் கல்வி கற்கின்ற முழு நேர, பகுதிநேர, மாலைநேர வகுப்புகளைச் சேர்ந்த பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பலாலி வீதியூடாக வந்த பேரணி ஆரியகுளம் சந்தியை அடைந்ததும் பேரணி தொடர்ந்தும் செல்ல பொலீஸார் அனுமதிக்கவில்லை. இதனால் பேரணி ஸ்ரான்லி வீதியூடாக இராசாவின் தோட்டப் பகுதிக்குச் சென்று பின்னர் அங்கிருந்து முலவைச் சந்தியை அடைந்து ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ்.மத்திய பஸ் நிலையப் பகுதியைச் சென்றடைந்தது.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கண்டிவீதியூடாக யாழ் செயலகத்தை பிற்பகல் 1.30 மணியளவில் பேரணி சென்றடைந்தது. அங்கு வைத்து யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக பிரதமர் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைப்பதற்காக மகஜர்கள் கையளிக்கப்பட்டன. மகஜர்களை அரச அதிபரின் சார்பில் செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.இராஜதுரை பெற்றுக்கொண்டார்.

இந்து கலாசார அமைச்சருக்குரிய மகஜரை அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் பெற்றுக் கொண்டார்.

பேரணியில் கலந்துகொண்ட மாணவர்கள் பதாகைகளைத் தாங்கிச் சென்றதுடன் பல்வேறு கோஷங்களையும் எழுப்பினர். பேரணி இடம்பெற்ற வீதிகளில் பொலீஸாரும் ஆங்காங்கே கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

மாணவர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் பிரதிநிதிகளும் யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களும் நேற்றைய பேரணியில் கலந்துகொண்டனர்.

நேற்றைய தினம் நடத்தப்பட்ட பேரணியில் மாணவர்கள் பயன்படுத்திய சுலோகங்கள் வருமாறு:-

★ கண்டியில் கண்ணாடிக் கட்டடம்; எமக்கோ இருக்க காணியில்லை!

★ வாக்குறுதிகளால் எம்மைக் கொல்லாதே!

★ அமைச்சரே! தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதற்கு வகை செய்யுங்கள்!

★ பதுளையில் பலமாடிக் கட்டடம் எமக்கோ இருக்கக் காணியில்லை!

★ உயர் தொழில்நுட்ப நிறுவனம் என்ன தனியார் கல்வி நிறுவனமா?

★ தேர்தலுக்கு மட்டுமா கூட்டமைப்பு? எம் காணி கொள்வனவிற்கு இல்லையா கூட்டமைப்பு? (ம-16)



பலாலி வீதியூடாக பேரணி சென்றபோது எடுக்கப்பட்ட படம். (படம் ரமணன்)

# பட்டாசு கொளுத்துவோரின் எல்லை மீறிய சேஷ்டைகள்!

வடமராட்சி,ஒக்.31

பொதுமக்கள் நடமாடும் நகரப் பகுதிகள், பொது வீதிகள் மற்றும் பொது இடங்களில் மக்களுக்கு இடையூறு செய்யும் விதத்தில் பட்டாசு கொளுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல்துறை அலுவலகம் தெரிவித்திருக்கிறது.

குடாநாட்டில் தீபாவளியை முன்னிட்டு பட்டாசு வெடிச்சத்தங்கள் சூடு பிடித்திருக்கின்றன. இவ்வாறு பட்டாசு கொளுத்துவோர் பொது இடங்களில் மக்களுக்கு இடையூறாக - ஆபத்தை ஏற்ப டுத்தும் விதத்தில் - அவற்றைக் கொளுத்தி வீசுகின்றனர் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. வீதிகளில் வாகனங்களை நோக்கியும் பட்டாசுகள் கொளுத்தி வீசப்படுகின்றன.

இத்தகைய சேஷ்டைகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைக் கருத்தில் கொண்டு அவற்றைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மீறி இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று புலிகளின் வடமராட்சி அலுவலகம் ஒரு செய்திக் குறிப்பில் தெரிவித்திருக்கிறது. (ஐ-173)

# கருத்துக் கணிப்பு குறித்த வழக்கில் ஆட்சேபணை மனு சமர்ப்பிப்பு

கொழும்பு,ஒக்.31

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைப்பதற்கு முன்னர் கருத்துக்கணிப்பு நடத்தப்படவேண்டும் என்ற மனுவைத் தள்ளுபடி செய்யுமாறு கோரி சட்டமா அதிபர் பூர்வாங்க ஆட்சேபணை மனு ஒன்றை மேல்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பில் இந்த ஆட்சேபணை மனுவை மேலதிக சட்டமா அதிபர் சலீம் மருக் நேற்று முன்தினம் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

சங்கைக்குரிய சரண கீர்த்த தேரர் கருத்துக்கணிப்பு நடத்துவதற்கான மனுவைத் தாக்கல் செய்திருந்தார். அதன் மீதான விசாரணை இடம்பெற்ற சமயமே ஆட்சேபணை மனு சமர்ப்பிக்கப்பட்டது.

கருத்துக் கணிப்புக் கோரும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மாத்திரமே உண்டென மேலதிக சட்டமாஅதிபர் தெரிவித்துள்ளார். அத்துடன் மனுவைச் சமர்ப்பித்தவர் குறிப்பிடும் ஆவணங்கள் செல்லுபடி அற்ற தன்மை கொண்டிருப்பதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை அடுத்தமாதம் 15ஆம் திகதிவரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (ஒ-12)

## பரிசுத்தினம்

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன. வித்தியாசாலை அதிபர் வி.நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதமவிருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. கோகிலா மகேந்திரராசா கலந்து கொள்வார். நிறுவுநர் தின உரையை இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் சைவப் புலவர் சு.செல்லத்துரை நிகழ்த்துவார். (ஒ-135)

## அங்கீகாரமற்ற இறைச்சி விற்பனை: அதிகாரி எச்சரிக்கை!

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட சின்னக்கடை மற்றும் பெரிய கடைச் சந்தைகளில் கோழி இறைச்சி, காட்டு இறைச்சி என்பன மாநகர சபையின் அங்கீகாரமின்றி விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் மக்களுக்கு பல சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படலாம். ஆகவே இதுகுறித்து பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். யாழ்மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி இவ்வாறு எச்சரித்துள்ளார்.

# இன்று மகளிர் உதைபந்தாட்டம் மத்திய கல்லூரி மைதானத்தில்!

வலி.வடக்கு,ஒக்.31

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளில் 13வயதுப் பெண்கள் அணிகளுக்கிடையே நடைபெறும உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதல் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி எதிர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. இப்போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. (ஒ-86)

# கலைப் பீடத்துக்கு 209 பேர் விசேட தெரிவின் கீழ் அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக். 31

யாழ்பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு புதிய கல்வி ஆண்டுக்கு விசேட அனுமதியின் கீழ் 209 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இவர்களின் பெயர் விவரங்கள் இன்று பல்கலைக்கழகத்தில் வெளியிடப்படும்.

கொழும்பில் தங்கியுள்ள துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம பிள்ளை மேற்கொண்ட முயற்சிகளை அடுத்து விசேட அனுமதித் திட்டத்தின் கீழ் இம்முறை அதிக எண்ணிக்கையான மாணவர்களுக்கு இடம் கிடைத்திருக்கிறது.

2001 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிலிருந்து இந்த விசேட அனுமதி பெறும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

பல்கலைக்கழக அனுமதி முறையின் கீழ் உள்ள வழமையான நடைமுறையின்படி கலைப்பீடத்துக்கு சுமார் 200 மாணவர்களே ஆண்டுதோறும் அனுமதி பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விசேட அனுமதி பெறும் மாணவர்களின் பாடங்கள் வருமாறு :-

இந்து நாகரிகம், இந்து தத்துவம், கிறிஸ்தவம், மெய்யியல், மனைப் பொருளியல், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சங்கீதம், நடனம், சமஸ்கிருதம், வரலாறு, மொழியியல்.

# தரங்குறைந்த அரிசி விவகாரம் விசாரிக்கக் குழு வருகின்றது

யாழ்ப்பாணம்,ஒக்.31

குடாநாட்டில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கவென கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள அரிசி தரம் குறைந்ததெனக் கூறப்படும் விவகாரம் குறித்து நேரில் ஆராய கொழும்பிலிருந்து உயர்மட்டக் குழு ஒன்று நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடந்த உயர்மட்ட மாநாடு ஒன்றில் இந்த விடயம் குறித்து ஆராயப்பட்ட பின்னர் இக்குழுவை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு முடிவாகியது.

தரங்குறைந்தது எனக் கூறப்படும அரிசி தொடர்பாக புனர்வாழ்வு, அகதிகள் மீளக் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன பிரதமருக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தார். (ஐ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

G.G. xxx தொடர் இலக்கமுடைய ஆட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவராசா, மாவடி பிள்ளையார் கோவிலடி, மீசாலை கிழக்கு, மீசாலை. (10008)

நல்ல நிலையிலுள்ள ஸ்ராண்டுடன் கூடிய இரும்புப் பெட்டி (IRON SAFE நகைக் கடைக்கு உகந்தது) விற்பனைக்குண்டு. தொடர்பு: S.S.கந்தசாமி, பாரதி லேன், சுதுமலை வடக்கு, மானிப்பாய் (Bank of Ceylon முன் ஒழுங்கை). (10054)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

3 மாதம் நிரம்பிய சிவப்பு நிற சமிரா இன பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. V.யோசப், மொகடின் மொஸ்லேன் (பள்ளி வாசல் முன்பாக), ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (10070)

புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் கோழிகளும் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (10037)

மிகக் குறைந்த விலையில் தரமான Prima Broiler குஞ்சுகளும் அதிவிஷேட Prima பேட்டுக் குஞ்சுகளும் இன்று மாலை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10046)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி வடக்கு, மடத்தடி மேற்கு வீதியில் (11 பரப்பு) பயன்தரு மரங்களுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட கல்வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி க.இராசம்மா, மீசாலை மேற்கு, மீசாலை (விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு முன்பாக). (10083)

## பொய்யாமொழி ஜோதிடம்

விவாகத்தடை, தொழிற்றடை, கல்வித்தடை அகல ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும் (பலன தவறினால் பணம் திரும்பப் பெறலாம்). சனி, செவ்வாய் கிழமைகளில் 140, பருத்தித்துறை வீதி, நல்லூர் ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயிலடியிலும், ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் பழம்பிள்ளையார் கோயிலடியிலும் சந்திக்கலாம். (9873)

## இறைச்சிக்கு வெட்டுவோருக்கு!

தீபாவளி தினத்தைமுன்னிட்டு கைதடிப்பகுதியில் இறைச்சிக்காக ஆடு, மாடு ஆகிய கால்நடைகளை வெட்டுவோர் எவராகவிருந்தாலும் கைதடியில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உபபணிமனையில் முன்அனுமதி பெறவேண்டுமென்று உபபணிமனையின் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-75)

## திருமண சேவை

எம்மிடம் தராதரம்மிக்க அமெரிக்கா, கனடா, லண்டன், சுவிஸ், ஆஸ்திரேலியா நாடுகளில் டாக்டர், என்ஜினியர், எக்கவுண்டன், ஆசிரியர் ஆகிய உத்தியோக மணமக்களின் குறிப்புக்கள் உண்டு. தொடர்புகளுக்கு: (1) 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (2) 67A, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு - 13. T.P.: 338162. FAX: 338161 (10066)

## மணமகள் தேவை

1967இல் பிறந்த, சதய நட்சத்திரம், 2ஆம் பாதம், ஜேர்மனியில் வதியும் மணமகனுக்கு படித்த, அழகான, ஜேர்மனியில் வதிவிட உரிமையுள்ள மணமகள் தேவை. மணமகளுக்கு 6-8 வயது வித்தியாசம் இருத்தல் வேண்டும். தொடர்பு:- இ.மாணிக்கம், "இரத்தினகிரி", பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு. (9983)

இந்து கௌரவ குடும்பத்தில் கேட்டை முதலாம் பாதம், வயது 34, இலங்கை அரச பாடசாலையில் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியருக்கு (தற்காலிகமாக மாலைதீவில் தொழில் புரிபவர்) தகுந்த (விஞ்ஞானம்/ கணிதம்/ ஆங்கில ஆசிரியையாகவும் தேவையேற்படின் மாலைதீவில் வேலை செய்யக்கூடியவராகவும்) மணப்பெண் தேவை. விளம்பர இல. 1689, மே/பா உதயன். (10082)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பொதுநிறம், உத்தரட்டாதி நட்சத்திரம் 3ஆம் பாதம், உயர்கல்வி படித்த, 5'4" உயரமுள்ள, (வயது 29) மணமகளுக்கு (உள்நாட்டில் அரசாங்க வங்கி, கூட்டுத்தாபன, ஆசிரியர் விரும்பத்தக்கது) மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல.1688, மே/பா உதயன். (10081)

## வகுப்புகள்

சுலபமாக ஆங்கிலத்தில் கதைகக் பயில, இலக்கணம், கடிதம், வினா விடை. வகுப்பில் பத்து (10) மாணவர்கள் மட்டும் தனித்தனி கவனம் செலுத தப்படும். வாரம் நான்கு (4) வகுப்புகள். ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (10014)


DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 350/=.

BHARATHI PATHIPPAKAM
OFF-SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
PHONE: 021-222 3081
(C/24301)


# சேதமடைந்த வீதியை திருத்த வேண்டுகோள்!

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து மாதகலுக்கு செல்லும் பிரதான வீதி பலத்த சேதமடைந்து குண்டுங் குழியுமான நிலையிலுள்ளது. இவ் வீதியை விரைவில் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-135)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

சண்டிலிப்பாய்,ஒக்.31

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலய சுற்றாடலிலும் மானிப்பாய் பட்டின சந்தைப் பகுதியிலும் பொது மக்களுக்கு நீண்ட காலமாக இடையூறு கொடுத்துவந்த கட்டாக்காலி நாய்கள் இவ்வாரம் அழிக்கப்பட்டன.

இதேவேளை -

ஆனைக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் இவ்வாரம் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு நஞ்சூட்டிக் கொல்லப்பட்டன. ஆனைக்கோட்டை, சாவற்கட்டு, காக்கைதீவு ஆகிய இடங்களில் 25 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. (ஐ-135)

# உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு!

உள்ளூராட்சி உதவியாளர்களாக கடமையாற்றுபவர்களுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் திருகோணமலையில் சேவைக்கால பயிற்சி வழங்கப்படவுள்ளது. மேற்படி பயிற்சிக்கு யாழ்மாவட்டத்திலிருந்து 15 உள்ளூராட்சி உதவியாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்டவர்களை எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். ஹட்டன் நஷனல வங்கிக்கு முன்பாக சகல பயண ஆயத்தங்களுடனும் வருகை தருமாறு உள்ளூராட்சி உதவியாளர் சங்க செயலாளர் செ.ரமேஸ் கேட்டுள்ளார். (ஐ)


## மனமுவந்த பாராட்டுக்கள்

5 ஆந்தரப் புலமைப் பரிசில் பரீட்சை - 2002இல் சித்தியடைந்து எமக்குப் பெருமை சேர்த்த எமது நிலைய மாணவர்களான

| | |
|---|---|
| செ.ஆன் லாவண்யா | 154 புள்ளிகள் |
| ம.ரொஷீன் மெலானி | 144 புள்ளிகள் |
| பு.மிதிலானி | 132 புள்ளிகள் |
| அ.பபிந்தன் | 132 புள்ளிகள் |
| பி.ஜே.ஜெயனேரியா | 128 புள்ளிகள் |
| நா.சுகந்தன் | 127 புள்ளிகள் |
| கு.கர்ணிகா | 126 புள்ளிகள் |
| வி.ஆன் நிற்றா | 125 புள்ளிகள் |
| க.ஆன் யஸ்மின் | 123 புள்ளிகள் |

ஆகியோரை மனமுவந்து பாராட்டுவதுடன் அவர்கள் மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

2003- 5ஆம் தரப் புலமைப் பரிசில் வகுப்புகள் நடைபெறுகின்றன.

(10079) காந்தி கல்வி நிலைய சமூகம், இளவாலை.



தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
இறக்குமதி செய்யப்பட்ட
சகல வித புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய நம்பகரமான ஸ்தாபனம்:

த:சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்

இல.21, சிறப்பு அங்காடி,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
☎ 222 2826.
(C/24493)





நாளை முதல் ஆரம்பம்
தென்மராட்சி சிற்றூர்திச் சேவையின்
இன்ரசிற்றி சேவை
யாழ். - முகமாலை - யாழ்.
ஆசனத்தில் அமர்ந்து பிரயாணம் செய்ய ரூபா 30/-. இச சேவையில் நின்று பிரயாணம் செய்வது அனுமதிக்கப்பட மாட்டாது.
(C/24545)



உயர் தரம்மிக்க
கனக்டர்ஸ்–அடப்டர்ஸ்
பிளக்ஸ்– சொக்கிட்ஸ்
கோ அக்சில் கேபிள்கள்






TV சென்டர் Pvt. Ltd.
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11,
தொ.பேசி: 434742,தொலைநகல் : 437687
மின் அஞ்சல்: tvcentre@eureka.lk
PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.



கந்தோர்,
வேலைத்தலம்,
சுப்பர் சந்தை...
ஆகியவற்றைச்
சுலபமாகச்
சென்றடைய
TVS
சாம்ப்
மோபெட்





த சம்பியன்
எல்லோராலும்
மிகவும் விரும்பப்படுவது





மேலும் தகவல்களுக்கு
சுசூக்கி மோட்டோஸ் லங்கா லிமிட்டெட்
795, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு-14.
தொலைபேசி: 542883-5 தொலைநகல்: 440889

உதயன்

## வடக்கில் உள்ள படையினரின் பிடிவாதம்

தாய்லாந்தில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் இன்று ஆரம்பமாகின்றன.

இருதரப்பினரும் நேற்றே தாய்லாந்துக்குச் சென்று விட்டார்கள். இன்று பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குத் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள்.

பல்வேறு விடயங்களோடு வடக்கு - கிழக்கில் முற்றுமுழுதாக இயல்புநிலையை ஏற்படுத்துவது குறித்துப் பேசி நல்ல முடிவைக்கான அரச, புலிகள் குழுக்கள் முயற்சி செய்கின்றன.

ஆனால், இங்கே படையினர் எதிர்த்திசையில் செல்வதையே காணமுடிகிறது.

நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் நடந்த உயர்மட்ட மாநாட்டில் இது துலாம்பரமாகத் தெரிந்தது. வடக்கில் படையினரின் நோக்கும், போக்கும், நடவடிக்கைகளும் சமாதான முயற்சிகளுக்கு முற்றும் மாறானவை என்பது துலாம்பரமாகத் தெரிய வந்தது.

யாழ்.செயலகத்தில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடந்த உயர்மட்ட பாதுகாப்பு மாநாட்டில் யாழ்.எம்.பிக்கள் மாவை சேனாதிராஜா, ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதலானோருடன் படைத்தரப்பில் யாழ். மாவட்டப் பிரதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கே.இரத்தினசபாபதி, காங்கேசன்துறை கடற்படைத்தள அதிகாரி கொமடோர் ஒபயசிங்க, தளத் தளபதிகளான பிரிகேடியர் எதிரிசிங்க, கேணல்களான குணத்திலக்க, ருபசிங்க தங்கொட முதலானோர் கலந்துகொண்டனர்.

இத்தனை படையதிகாரிகளும் தங்கள் முந்திய இறுக்கமான நிலையிலிருந்து சிறிதும் மாறவில்லை. வடக்கில் சரியோ - பிழையோ, நல்லதோ - கெட்டதோ தாம் நினைத்ததே நடக்கவேண்டும் என்பதில் இவர்கள் விடாப்பிடியாக நிற்கின்றார்கள்.

வலி.வடக்குப் படைநிலைகள் பின்நகர்த்தப்படமாட்டா. அதாவது, தெல்லிப்பழையில் பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாப்பு நிலைகள் பின்நோக்கி நகர்த்தப்படமாட்டா. அவை தொடர்ந்தும் அப்படியே வைத்துப் பேணப்படும் என்றார் மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி.

நாகர்கோவில் பகுதியில் உள்ள படைமுகாமை ஊடறுத்துச் செல்லும் நாகர்கோவில் - பருத்தித்துறை வீதியைப் பொதுமக்களின் போக்குவரத்துக்குப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்று யாழ்.படைத்தலைமை திட்டவட்டமாகத் தெரிவித்தது.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இரவில் கரைக்குத் திரும்பமுடியாது. திரும்புவதற்கு அனுமதி வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் அதிகம் இருக்கின்றன என்றார் காங்கேசன்துறை கடற்படைத்தள அதிகாரி கொமடோர் ஒபயசிங்க.

முகாம்களைச் சுற்றிப் பாதுகாப்புக்காகக் கடலில் கண்ணிகள் விதைக்கப்பட்டுள்ளன. அவை அகற்றப்பட வேண்டும். தவிரவும் இருட்டில் வரும் மீனவர்களை இனங்காண்பதற்கு சமிக்ஞை விளக்குகள் அமைக்கப்படவேண்டும். இவை இரண்டையும் செய்து முடிக்கக் காலம் பிடிக்கும். அதுவரை மீனவர்கள் இரவில் கரைக்கு வரக்கூடாது என்ற தடை தொடர்ந்து இருக்கும் என்றார் கொமடோர் ஒபயசிங்க.

சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டு இருக்காமல் இந்த இரண்டு கருமங்களையும் விரைவில் செய்துமுடிக்க முடியாதா? அதற்கு மனம் வர வேண்டுமே!

காங்கேசன்துறைக் கடற்படைத் தள அதிகாரி கொமடோர் ஒபயசிங்க இந்த மாநாட்டில் வெளிப்படையாகச் சொன்ன ஒரு விடயம் மிகவும் முக்கியமானது. "புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் யுத்தநிறுத்தம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. நிரந்தர சமாதானம் இன்னும் வரவில்லை. இந்த நிலையில் நாம் எமது கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடியாது" என்றார் அவர்.

பாதுகாப்புப் படையினரிடம் இப்படியான மனப்பான்மையும் கட்டுப்பாடுகளும் இருக்கும்போது எப்படித்தான் சமாதானம் வரும்?

முன்னைய அரசாங்கக் காலங்களில் நடந்த சமாதானப் பேச்சுக்கள் எல்லாம் குழம்பியதற்கு படையினரின் இப்படியான மனோபாவமும் பெருமளவில் காரணமாக இருந்தது. இந்தக் கட்டத்திலாவது அரசு அதை மாற்றியாகவேண்டும். மக்களின் உரிமைகளோடும் உணர்வுகளோடும் தொடர்ந்து விளையாட முடியாது என்பதை நினைவில் கொள்ளுவது நல்லது.

# எமது தொழில் வளத்தை தமிழக மீனவருக்கு விட்டுக்கொடுக்கோம்!

## மீனவர் சமாசத் தலைவர் தவரட்ணம்

யாழ்ப்பாணம்,ஒக்.31

தமிழக மீனவர்களுடன் நாம் புரிந்துணர்வையும் நட்புணர்வையும் கொண்டிருக்கிறோம். ஆயினும், எமது தொழில் வளத்தை- அதற்கான உரிமையை - பங்கிடவும் விட்டுக்கொடுக்கவும் நாம் தயாரில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம்.

இலங்கைக் கடற்பகுதியில் இணைந்து தொழில்செய்ய அனுமதிக்குமாறு தமிழக மீனவர் தரப்பிலிருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோள் தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

குடாநாட்டு மீனவர்களுக்குரிய கடற்பிரதேசம் மன்னார் குடாவிலிருந்து பாக்குநீரிணைப் பகுதிகளை உள்ளடக்கிய குறுகிய பிரதேசமாகும். இக்குறுகிய பகுதியிலேயே யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 7 ஆயிரத்துக்கும் மேறபட்ட மீனவர்களும் கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 5ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்களும் தொழில் செய்யவேண்டியுள்ளது. இந்திய எல்லைக்கோட்டிற்கு அப்பால் எமது மீனவர்கள் எவரும் செல்வதில்லை. குறுகிய கடற்பரப்பிலேயே எமது மீனவர்கள் தமது சீவனோபாயத்தை தேடவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. கடந்த 20 வருட காலமாக, எமது கடற்பரப்பினுள் அந்நிய மீனவர்களுடைய நுழைவு காரணமாக பெரும்பகுதி கடல்வளங்களை நாம் இழந்து வருகிறோம்.

பாரிய இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி தொழில் செய்வது தவிர்க்கப்படவேண்டிய - கரையை அண்டிய - கடற்பகுதிகளில அவற்றைப் பயன்படுத்தியும் -

வளர்ந்துவரும் மீன் இனங்களை அழிக்கக்கூடிய தொழில் முறைகளான 'இரால் இழுவை மடி', 'கடலட்டை இழுவை மடி' போன்ற முறைகளை கைக்கொண்டும் - எமது மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். எமது மீனவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் மற்றும் அவர்களின பொருளாதார வசதியீனங்களே இவற்றுக்கு காரணமாகும். இந்நிலைமை நீடிக்குமேயானால். எமது கடல் வளம் முற்றாக அழிந்துபோகக் கூடிய சூழ்நிலை உருவாகலாம் எனவே, எமது மூன்று பிரதான மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் சமாசங்கள் மற்றும் சங்கங்கள் இதனைச் சரியான விதத்தில் புரிந்துகொண்டு திட்டமிட்டு செயலாற்ற முன்வரவேண்டும்.

தமது தொழில்களை உரிய முறையில் மேற்கொள்ளும் வகையில குடாநாட்டு மீனவர்களுக்கு பொருளாதார உதவிகள் செய்யப்படுவது அவசியம். எமது மீனவர்கள் ஆழ்கடற்தொழிலை மேற்கொள்ளவேண்டிய தேவையுண்டு. அதற்கு வாய்ப்பு வழங்கவேண்டும். இவ்வாறு பொருளாதார வசதிகள் ஏற்படுத்தப்படாத நிலையில், இலங்கை மீனவர்கள் தொழில் செய்யும்போது, இந்திய மீனவர்களின் குறுக்கீடு இருக்குமானால் தேவையற்ற சச்சரவுகள், மோதல்கள் ஏற்பட அது வழிவகுத்துவிடும். எனவே, இவ்விடயங்கள் முன்னதாகவே கருத்திலெடுக்கப்பட்டு தவிர்க்கப்படவேண்டியவை. மீன்பிடித் தொழிலைப் பொறுத்தவரை வளங்களைக் காப்பாற்றிக்கொள்ளும வகையில் திட்டமிடப்பட்டு செய்யவேண்டிய ஒரு தொழிலாகும்.

தமிழக மீனவர்களுடன் நாம் புரிந்துணர்வையும் நட்புணர்வையும் கொண்டிருக்கிறோம். ஆயினும் எமது தொழிலவளத்தை - அதற்கான உரிமையை - பங்கிடவும் விட்டுக்கொடுக்கவும் நாம் தயாரில்லை.

- இவ்வாறு தவரட்ணம் தெரிவித்தார்.

(ஐ-9)

# வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை குடாநாட்டு மக்களுக்குக் கடனுதவி!

## மாவட்ட முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.31

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்கப்படவுள்ளது. இதற்கென தலைமையகத்தினால் 95 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சபையின் மாவட்ட முகாமையாளர் எஸ்.மாசிலாமணி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய வீடுகளை அமைத்தல், சேதமடைந்த வீடுகளை புனரமைத்தல் மற்றும் கட்டிமுடிக்கப்படாத நிலையிலுள்ள வீடுகளைப் பூர்த்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் ஒருவர் சுமார் ஒரு லட்சம் ரூபாவரை கடனாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

50 ஆயிரம் ரூபாவரை கடனாகப் பெறுவோர் இருவரது உத்தரவாதத்தை வழங்கினால் போதுமானது. உத்தரவாதம் வழங்குவோர் அரச உத்தியோகத்தராக இருக்கவேண்டும். இக்கடன்தொகைக்கு 10வீத வட்டி அறவிடப்படும்.

ஒரு லட்சம் ரூபாவரை கடனாகப் பெறுவோர் காணி உறுதியைச் சமர்ப்பிக்கவேண்டியிருக்கும். இதற்கு 12 வீத வட்டி அறவிடப்படும்.

கடன்பெறுவோர் 45 வயதுக்குட்பட்ட - மாதாந்தம் இரண்டு ஆயிரத்து 500 ரூபாவுக்குமேல் வருமானமுடையதாக இருத்தல் சிறப்பானதாகும். இவ்வீடமைப்புக் கடன்களைப் பெறவிரும்புவோர் அவ்வப்பகுதி பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றினூடாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கப்பட்டுள்ளனர்.

இக்கடன்கள் ஆகக்கூடியது 10 வருடங்களுக்குள் செலுத்தி முடிக்கப்படவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

(ஒ-9-10)

# மானிப்பாயில் திருடிய மோ. சைக்கிள் வட்டுக்கோட்டைப் பகுதியில் மீட்பு!

மானிப்பாய்,ஒக்.31

மானிப்பாயில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் வட்டுக்கோட்டையில் மீட்கப்பட்டது. மோட்டார் சைக்கிளைத் திருடியதாகக் கூறப்படும் இளைஞர் அகப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மானிப்பாயில் ஒரு வீட்டில் வைத்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிளே நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டை கோட்டைக்காடு பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்து மீட்கப்பட்டது.

திருட்டுப்போன தனது மோட்டார் சைக்கிளை உரிமையாளர் தேடிவந்தார். எதிர்பாராத விதமாக துணவி வீதியால் தனது மோட்டார் சைக்கிளில் ஒருவர் சென்று கொண்டிருப்பதைக் கண்டார். உடனடியாக வேறு சிலருடன் மோட்டார் சைக்கிளைப் பின் தொடர்ந்தபோதிலும் அதனைக் கைப்பற்றமுடியவில்லை.

வட்டுக்கோட்டைப் பகுதியில்தான் அந்த மோட்டார் சைக்கிள் இருக்கவேண்டும் என்பதை உரிமையாளர் ஊகித்தறிந்தார். மானிப்பாய் பகுதி இளைஞர்கள், வட்டுக்கோட்டை இந்து இளைஞர் மன்றத்தினர் மற்றும் அராலி மக்களினதும் உதவியுடன் உரிமையாளர் நேற்றுமுன்தினம் கோட்டைக்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளைத் தேடினார். இரவு 8.30 மணியளவில் ஓரிடத்தில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டு அதனை உரிமையாளர் மீட்டார்.

# விசர்நாய்க் கடியால் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.31

மூன்றுமாதங்களுக்கு முன்னர் விசர்நாய்க் கடிக்காளான ஒருவர் ஏ.ஆர்.வி.தடுப்பூசி மருந்தை ஏற்றத் தவறியமையால் விசர்நாய்க்கடி நோய்க்கிலக்காகி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் வீதிப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அன்ரனி மக்டனோல்ட் (வயது 17) என்ற இளைஞரே மரணமானவராவார்.

திடீரென ஏற்பட்ட மெல்லிய காய்ச்சல், மூச்சுத்திணறலையடுத்து கடந்த 25ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருநாள்களின் பின் கடந்த 27ஆம் திகதி அங்கு மரணமானார். (ஒ-15)

**நாளை**

ஐப்பசி 15
வெள்ளிக்கிழமை
(01.11.2002)
திதி : ஏகாதசி
நண்பகல் 12.20 வரை.
நட்சத்திரம்: பூரம்
நண்பகல் 12.38 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 6.03 - 7.33
ராகுகாலம் : 10.33 - 12.03
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

நண்பனாக மாறிய எதிரியை விசுவாசமுள்ளவனாகக் கருதக்கூடாது.

# யாழ். - மிருசுவில் பஸ் சேவையை சீராக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.31

யாழ். - மிருசுவில் பஸ் சேவையை சீராக்கி உதவுமாறு இப்பகுதி மக்கள் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பொது முகாமையாளரைக் கேட்டுள்ளனர்.

தற்சமயம் யாழ்ப்பாணத்திற்கான 769ஆம் இலக்க பாடசாலை பஸ்சேவை கொடிகாமத்திலிருந்தே புறப்படுகிறது. இதனால் யாழ்.நகர் மற்றும் சாவகச்சேரி பகுதிகளில் கல்வி பயிலும் மிருசுவில், உசன், விடத்தற்பளை பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் நீண்டதூரம் சென்றே கொடிகாமத்தில் பாடசாலை பஸ்ஸில் பயணிக்க வேண்டியுள்ளது. இதனால் தென்மராட்சி இடப்பெயர்வுக்கு முன்னர் செயற்படுத்தப்பட்டதுபோல் பாடசாலை பஸ்சேவையை மீண்டும் மிருசுவிலில் இருந்து மேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன், மிருசுவிலில் இருந்து புறப்படும் பஸ்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே மிருசுவிலில் இருந்து புறப்பட்டுச் செல்வதால் பயணிகள் பஸ்களை தவறவிட நேர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மிருசுவிலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான கடைசி பஸ் சேவை மாலை 5 மணிக்கு மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது சுமுக சூழ்நிலை நிலவுவதால் இதனை 6 மணியாக நீடிக்கவேண்டுமெனவும் பயணிகள் பொதுமுகாமையாளரைக் கேட்டுள்ளனர். (ஒ-15)

# தச்சன்பிட்டி மயானத்துக்கு தகனமேடை அமைக்குக!

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

கைதடி, தச்சன்பிட்டி மயானத்தில் சடலங்களை தகனம் செய்வதற்கான மேடையும், கிரியைகளை மேற்கொள்வதற்கான மண்டபமும் அமைத்துத்தரும்படி அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

மழைகாலங்களில் இந்த மயானத்தின் நாலாபக்கமும் நீரசூழ்ந்து நிற்பதனால், சடலங்களை பூரணமாக எரிக்கமுடியாத நிலை தோன்றுகிறது. கிரியைகளை வெட்டவெளியில் செய்ய வேண்டியுள்ளது.

இம்மயானத்தை கைதடிப் பகுதியிலுள்ள மூன்று கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-75)

**GNANIAR EDUCATIONAL SOCIETY**

ஞானியார் கல்விக் கழகம்

இம்பர்சிட்டி, பருத்தித்துறை நடத்தும்

# பாராட்டு விழா

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து 2002ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 151 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

| | |
|---|---|
| இடம்: | யா/வட.இந்து மகளிர் கல்லூரி மண்டபம் |
| காலம்: | 2002-11-03 ஞாயிறு பி.ப. 2.30 மணி (புதிய நேரம்) |
| தலைவர்: | திரு.வே.நவரத்தினராசா (தலைவர்,ஞானியார் கல்விக் கழகம்) |
| பிரதம விருந்தினர்: | திரு.மு.திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி) |
| சிறப்பு விருந்தினர்: | திரு.ஆ.சிவசுவாமி (Special Guest - பிரதேச செயலர், பருத்தித்துறை) |
| | திரு.ஆ.இராசேந்திரம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி, வடமராட்சி வலயம்) |

M.S.F. Team Point Pedro

இந்நிகழ்வில் கலந்து எமது வளரும் பயிர்களுக்கு உரமூட்டுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானியார் கல்விக் கழகம்,
இம்பர்சிட்டி, பருத்தித்துறை.

(10052)


# அரிசி, காய்கறி விலைகள் கொழும்பில் உயர்வு

கொழும்பு,ஒக்.31

அரிசி, காய்கறி, தேங்காய் ஆகியவற்றின் விலைகள் கொழும்புச் சந்தையில் அதிகரித்துள்ளன. மீன் வகைகளின் விலைகள் ஓரளவு குறைந்திருக்கின்றன.

அறுவடை இன்னமும் ஆரம்பமாகாததாலும் சந்தைக்குப் போதியளவு அரிசி வந்து சேராததனாலும் அரிசி விலைகள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கிலோ சம்பா 39 ரூபாவரை உயர்ந்திருப்பதாக சந்தை வட்டாரங்கள் கூறின. ஒரு கிலோ சிவப்பு அரிசி 27 ரூபாவாகவும் நாட்டரிசி 26 ரூபாவாகவும் விலை அதிகரித்திருக்கின்றன.

காய்கறிகளின் விலைகள் அதிகரிக்க கடந்த வாரங்களில் பெய்த அடைமழை காரணமாகும் எனவும் - மலையகப்பகுதிகளிலும் தாழ் நிலப் பகுதிகளிலிருந்தும் போதியளவு காய்கறிகள் கொழும்பு சந்தைக்கு வரவில்லை எனவும் - கூறப்பட்டது.

ஆயினும், போதியளவு மீன்கள் சந்தைகளுக்கு வந்திருப்பதால் விலைகள் குறைந்திருக்கின்றன. திருகோணமலை, கல்பிட்டி, மன்னார் ஆகிய இடங்களில் இருந்தும் மீன்கள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. (ஐ)


# நல்லூர் பிரதேச சபை
## 2003 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றை 2003ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி தொடக்கம் 2003ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதிவரை குத்தகைக்கு விடுவதற்கு கேள்விகள் 26.11.2002ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிவரை நல்லூர் பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இரு பிரதிகளை "தலைவர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 14.11.2002ஆம் திகதி நண்பகல் 12.00மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை, திருநெல்வேலி துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் என்பவற்றிற்கு விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00இற்கும், ரூபா 200,000.00இற்கும், ரூபா 200,000.00இற்குக் குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்த ஒரு கேள்வியையும் காரணங்காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் 1/3பகுதியை 29.11.2002ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ள வேண்டும்.

குறிப்பு:

1. திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல. I, II கொக்குவில் உபஅலுவலக இறைச்சிக் கடைகள் ஆகியவற்றின் மூன்று மாதவாடகை ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் [illegible] வேண்டும்.
2. சந்தைகளைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் 3 வீதத்திற்கு மேல் சந்தை வரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 1.00இற்கும் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 2.00இற்கும் மேல் பாதுகாப்புக் கட்டணம் அறவிடக்கூடாது.
4. தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்குப் புறம்பாக தொகையின் 20 வீதம் வற்வரியாகச் செலுத்தப்படல் வேண்டும். மேற்படி தொகையும் விண்ணப்பப்படிவத்தில் காட்டப்படுதல் வேண்டும்.
5. கேள்விப்பத்திரத் தொகையுடன் அதற்குரிய 20 வீத வற் வரி செலுத்தப்படுதல் வேண்டும்.
6. இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப் படிவம் பெறுபவர்கள் தாங்களது முன்னைய [illegible] நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து நிலுவை நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

| சந்தைகள் இறைச்சிக்கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பும் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை(வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. திருநெல்வேலிச் சந்தை | 500.00 | 10,000.00 | 3,992,725.00 |
| 2. திருநல்வேலித் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 500.00 | 5,000.00 | 310,296.00 |
| 3. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை. இல. I | 350.00 | 5,000.00 | 79,800.00 |
| 4. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. II | 350.00 | 5,000.00 | [illegible],150.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. கொக்குவில் சந்தை | 500.00 | 5,000.00 | 165,000.00 |
| 2. கொக்குவில் சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 350.00 | 5,000.00 | 70,891.00 |
| 3. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 130,000.00 |
| 4. கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | [illegible],775.00 |
| 5. கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 350,000.00 |
| 6. பலாலி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 100,000.00 |
| 7. கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 50,000.00 |
| 8. மஞ்சத்தடி மாட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 121,575.00 |
| 9. கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும், மாட்டிறைச்சிக் கடையும் | 350.00 | 5,000.00 | 50,000.00 |
| 10 கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன் சந்தை | 100.00 | 500.00 | 1,065.00 |

கோண்டாவில் பலாலி வீதி ஆட்டிறைச்சிக்கடை, மஞ்சத்தடி மாட்டிறைச்சிக்கடை, அரசடி வீதி மீன் சந்தை ஆகியவற்றிற்கு விண்ணப்பப்படிவம் கோருபவர்கள் [illegible] இடத்தை தெரிவுசெய்து காணி உரிமையாளரின் சம்மதக்கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி,
28.10.2002

(C/24578)

க.பஞ்சாட்சர வரராஜன் (ஜே.பி.யு.எம்),
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 - 06 - 1924



மறைவு
09 - 11 - 2001

அமரர் தாவடியூர் முத்தமிழ்வித்தகர்

## கலைமணி சுப்பையா வடிவேலு

திதி: 31.10.2002

பாரினில் பாவலனாய் பாசமிகு தந்தையாய் - வில்லுப்
பாட்டுக்கொரு தலைவனாய் - நகைச்சுவை நடிகனாய்
நாடகத்தில் நடித்ததுபோல நம்வாழ்க்கையும் மேடையில்லா
நாடகமென்று கூறி நம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டொன்று போனாலும் அன்புத் தெய்வமே - உங்கள்
நினைவுகளை எம்மால் மறக்க முடியவில்லை!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள், உற்றார், உறவினர்கள்.

*மலைவேம்படி ஒழுங்கை,*
*சுதுமலை கிழக்கு,*
*மானிப்பாய்.*
(10051)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி சீனியர் செங்கமலம்

தோற்றம்
18-06-1928

மறைவு
30-09-2002

*அன்புடனும் பண்புடனும்*
*வாழ்ந்த எங்கள் அம்மாவே!*
*கண்ணியத்தோடும் கரிசனையோடும்*
*எம்மை வளர்த்த அன்புத்தாயே!*
*உங்களை நினைத்து எங்கள்*
*நெஞ்சம் உருகுதம்மா!*
*உங்கள் அன்பு என்நாளும்*
*எங்கள் நெஞ்சில் வாழும் அம்மா.*

30.09.2002 அன்று மறைந்த எமது அன்புத் தாயாரின் மரணச்செய்தி கேட்டு நேரிலும் கடிதத்திலும் தந்தி மூலமும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் அனுதாபம் தெரிவித்த வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய கலைப் பிரிவு மாணவர்களுக்கும் கலைமகள் சனசமூக நிலையத்தாருக்கும் மற்றும் சந்திரன் குடும்பத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (31.10.2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. இந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சப்பலை வீதி, தொண்டமானாறு.* பிள்ளைகள், மருமக்கள்.

(10067)

# ஜா - எல குண்டு வெடிப்பு விசாரணை எதிர்வரும் டிசெம்பருக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக்.31

ஜா - எல குண்டு வெடிப்பு வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாததையடுத்து வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது ஜா-எலவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இவ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு மாற்றப்பட்டிருந்தது.

விசேட நீதிமன்ற நீதிபதி சித்திரசிறி முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள் ஆஜராகி இருந்தபோதிலும் எதிரிகள் எவரும் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

இவ்வழக்கில் உள்ள ஐந்து எதிரிகளும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாக எதிரிகள் தரப்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் என்.ஸ்ரீகாந்தா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி, பி.ரவீந்திரன், ஆர். யோகேஸ்வரன் ஆகியோர் நீதிபதியிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து எதிரிகளை மன்றின் முன் ஆஜர்செய்யுமாறு நீர்கொழும்பு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

குற்றச்சாட்டுப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு தமிழ் மொழிபெயர்ப்பு இணைக்கப்பட்டிருக்கவில்லை என்று எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த தவணைக்குள் தமிழ் மொழிபெயர்ப்பைத் தாக்கல் செய்யுமாறு அரசு தரப்புக்கு நீதிபதி பணிப்புரை வழங்கினார்.

இதற்குத் தேவைப்படும் கால அவகாசத்தை உத்தேசித்து டிசெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைப்பதாகத் தெரிவித்தார்.

இவ்வழக்கில் நாகலிங்கம் ரவீந்திரன் அல்லது ரவி, செல்வரட்ணம் சிறிதரன், ரத்தவெளி அஜித் குமார சிறி, ரணசிங்க ஆராச்சிகே அஜித் ரோகண, அம்பலவாணர் ஜெயபாலன ஆகிய ஐவர்மீதும் கூட்டாகவும் தனித் தனியாகவும் மொத்தம் 101 குற்றச்சாட்டுக்கள் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஒப்புதல் வாக்குமூலங்கள் உட்பட மொத்தம் 20 சான்றுப் பொருள்களும் இவ்வழக்கில் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் இடம்பெற்றுள்ளன.

110 பேர் சாட்சிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ஒ)

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அரிக்கேன் விளக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.31

வன்னியிலிருந்து வந்து குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கு 'யுனிசெவ' நிறுவனம் 'அரிக்கேன்' விளக்குகளை வழங்கவுள்ளது. இந்த விளக்குகள் பிரதேச செயலர் பிரிவுரீதியாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-79)

## உழவு இயந்திரம் மீளவழங்கப்பட்டது

தென்மராட்சி,ஒக்.31

கடந்த 2000ஆம் ஆண்டு மே மாதம் பத்தாம் திகதி சீருடையினரால் எடுத்துச்செல்லப்பட்ட மீசாலை கமநல சேவைகள் நிலையத்தின் உழவு இயந்திரம் கடந்த சனிக்கிழமை மீள ஒப்படைக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் வயல்களில் உழவு வேலைகள் மேற்கொள்வதற்கும் விவசாயிகளுக்குத் தேவையான விவசாயப் பொருள்களை வழங்குவதற்கும் வசதியாக உழவு இயந்திரத்தினை மீள வழங்குமாறு பிரதமர், பாதுகாபபு அமைச்சர் ஆகியோருக்கு பொரும்பாக உத்தியோகத்தர் விடுத்த வேண்டுகோளை அடுத்தே உழவு இயந்திரம் மீள வழங்கப்பட்டுள்ளது.

இதனுடன் எடுத்துச்செல்லப்பட்ட சாவகச்சேரி நகர சபையின் உழவு இயந்திரம் இன்னமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## கோப்பாய்ப் பகுதியில் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

வலி.கிழக்கு,ஒக்.31

ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் வன்னியில் இருந்து மீளவும் கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் குடியமர்ந்த குடும்பங்களுக்கு 65 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கவென 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோப்பாய் பிரதேச செயலர் தனது பகுதியில் உள்ள கிராம அலுவலர்களுக்கு அறிவித்துள்ளார்.

கிராம அலுவலர்கள் மீளக் குடியமர்ந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து வங்கி மூலம் கட்டம் கட்டமாக நிதி உதவிகளை வழங்க ஒழுங்குகளைச் செய்து வருவதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-180)

# கொடிகாமம் பஸ் நிலையத்தை புனரமைப்பது இன்றியமையாதது

## பிரதேசசபைக்கு வணிகர்கழகம் கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.31

சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படும் கொடிகாமம் பஸ் நிலையத்தை புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக் கொடிகாமம் வணிகர் கழகம் சாவகச்சேரி பிரதேச சபைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொடிகாமம் பஸ் நிலையத்தின் கூரைப்பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. தற்போது பெய்து வரும் மழைநீர் இதனால் தேங்கி நிற்கிறது. இந்த பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் ஏ-9 வீதியூடான போக்குவரத்து அதிகரித்துள்ளதை அடுத்து இந்த பஸ் நிலையம் முக்கிய இடமாக விளங்குகின்றது.

பெருமளவான பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் இந்த பஸ் நிலையம் ஊடாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் முகமாலை ஆகிய பகுதிகளுக்கு சென்று வருகின்றனர். ஆகவே, இந்த பஸ் நிலையம் புனரமைப்புச் செய்யப்படவேண்டியது இன்றியமையாததாகும்.

எனவே, உடனடியாக சாவகச்சேரி பிரதேச சபையின் மூலம் இதனைப் புனரமைப்புச் செய்து பயணிகளுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்க்க உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-5)

# மண்டைதீவில் மீளக்குடியமர்ந்த 35 குடும்பங்களுக்கு குடிசைகள்

## அமைத்துத் தர நடவடிக்கை

மண்டைதீவு,ஒக்.31

ஏ-9 பாதையூடாக மண்டைதீவுப் பகுதியில் மீளக்குடியமர்ந்த 35 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் குடிசைகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதுகுறித்து மண்டைதீவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் 35 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டன.

வேலணை உதவி அரசாங்க அதிபர் இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், அப்பகுதி கிராம அலுவலர்கள், பொதுமக்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஐ.நா.தூதரகப் பிரதிநிதி பி.பாலகிருஷ்ணன், வேலணை உதவித் திட்டமிடல் அதிகாரி த. தெட்சணாமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்காலிகக் கொட்டகைகளை அமைப்பதற்காக ரூ.11 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படவுள்ளன. 29 மீன்பிடிக் குடும்பங்களும், 6 விவசாயக் குடும்பங்களும் இத்திட்டத்தில் பயன்பெறவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட 29 மீன்பிடிக் குடும்பங்களினதும் குடிசைகளை உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள கடற்படையினரின் தலைமை அலுவலகத்திலிருந்து 100 யார் தொலைவில் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குடிசைகள் அமைக்கப்படவுள்ள இடத்தைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்வையிட்டு திருப்தி தெரிவிக்கப்பட்ட பின்பே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-88)

# கொடிகாமம் கிராமிய வங்கியில் 8 நாள்களில் 1500 கணக்குகள்

கொடிகாமம்,ஒக்.31

மீளக்குடியமர்வு கொடுப்பனவுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையடுத்து கொடிகாமம் கிராமிய வங்கியில் எட்டு நாள்களில் ஆயிரத்து 500 கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவுத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு தென்மராட்சியில் உள்ள வங்கிகளின் கணக்குகளே ஏற்றுக்கொள்ளப்படும் என கிராம உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் பெரும் எண்ணிக்கையான மக்கள் வங்கிகளின் முன்னால் கொட்டும் மழையின் மத்தியிலும் வரிசையில் காத்துநின்று வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கின்றனர்.

கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிப்பிரிவு காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இயங்கி வருகின்றது. கிராமிய வங்கியின் வழமையான செயற்பாடுகள் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரையாகும். அத்துடன் கிராமிய வங்கியில் 100 ரூபாவை செலுத்திக் கணக்குகளை ஆரம்பிக்கமுடியும் எனவும்-

மீள்கொடுப்பனவு பதிவுகள் முடியும்வரை வாரத்தின் 7 நாள்களும் வங்கி இயங்கும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-74)



நல்லூர் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா அண்மையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் வி.எஸ்.சொக்கலிங்கம் சிறுமி ஒருவருக்கு அன்பளிப்பு வழங்குவதைப் படத்திற் காணலாம். பிரதேச செயலர் ந.வேதநாயகன், திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் சமூக சேவை அலுவலர் ஆகியோரும் படத்திற் காணப்படுகின்றனர். (எ.)

## ரூ. 26 லட்சத்தை உடனே தருக:

# சங்கானை கூட்டுறவுச் சங்கம் யாழ்.அரச அதிபருக்கு கடிதம்

சண்டிலிப்பாய்,ஒக்.31

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இடம்பெயர்ந்தோருக்கான இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கியமைக்கான சேவைக் கட்டணம் 26 லட்சம் ரூபாவை யாழ். செயலகம் நீண்டகாலமாக செலுத்தாமல் இருந்து வருவதாகவும் -

இதனை விரைவில் சங்கத்திற்குச் செலுத்துமாறும் -

சங்க நிர்வாகம் யாழ். மாவட்ட அரச அதிபரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

முன்னைய காலங்களில் இச்சேவைக் கட்டணக் கொடுப்பனவுக்கு மாற்றாக சங்கத்திற்கு நிதி விநியோகம் செய்யப்பட்டது. தற்போது அவ்வாறு வழங்கப்படவில்லை. சங்கம் தற்போது பலத்த சீனி நெருக்கடியில் உள்ளது.

ஆகவே, மேற்படி 26 லட்சம் ரூபாவையும் சங்கத்திற்கு விரைவில் கிடைக்க ஆவனசெய்யுமாறு இக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இத்தகவலைச் சங்கப் பொது முகாமையாளர் வி.துரைசிங்கம் தெரிவித்தார். (ஒ-135)

# கல்வியியற் கல்லூரிக் காணி தொடர்பான வழக்கு தள்ளுபடி

யாழ்ப்பாணம்,ஒக்.31

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கட்டடங்கள் அமைப்பதற்காக கோப்பாய்ப் பகுதியில் சுவீகரிக்கப்பட்ட காணி தொடர்பாக யாழ்.நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கட்டடங்கள் அமைப்பதற்கென நாடாளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தன் 2000ஆம் ஆண்டில் நன்கொடையாக 220 பரப்புக் காணி வழங்கினார். இந்த இடத்தில் கல்லூரிக்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கோப்பாயைச் சேர்ந்த ச.பத்மநாதன் என்பவர் அக்காணியில் இரண்டு பரப்புக்கு உரிமைகோரி கோப்பாய்ப் பிரதேச செயலர், கிராம அலுவலர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஆகியோருக்கு எதிராக யாழ்.மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, காணியில் உரிமை உள்ளதற்கான தகுந்த சான்றை வழக்காளி சமர்ப்பிக்காததால் வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளார். அத்துடன், வழக்குக்கான செலவுத் தொகையை வழக்காளி எதிராளிகளுக்கு செலுத்தவேண்டுமெனவும் கட்டளை பிறப்பித்துள்ளார். (ஒ-3)

## நகர்ப்புறங்களுக்கு நிகராக

# கிராமப்பகுதிப் பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்த உழைப்போம்!

## கல்விச் சமூகத்துக்கு விரிவுரையாளர் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.31

கிராமப்புற மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளில் சேரமுடியாத நிலைமை உள்ளது. ஆகவே, நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு நிகராக கிராமப்புறப் பாடசாலைகளை மேம்படுத்த, கல்விச் சமூகம் முன்வரவேண்டும்.

அண்மையில் கோப்பாய் மகா வித்தியாலய பரிசில்நாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் மா.சின்னத்தம்பி இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

கிராமப்புறப் பாடசாலைகளில் கற்கும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், நகர்ப்புற பெரிய பாடசாலைகளில் அனுமதி பெறமுடியாதநிலை உள்ளது. பணம் செலுத்தி அனுமதி பெறும் வசதியும் செல்வாக்கும் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளே நகர்ப்புற பிரதான பாடசாலைகளில் கல்வி பயிலும் நிலையைக் காணமுடிகின்றது.

ஆகவே, கிராமப்புறப் பாடசாலைகளை சகல வளங்களையும் கொண்டதாக மாற்றி அமைத்து இந்தச் சவாலை முறியடிக்க பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் யாவரும் முன்வந்து செயற்படவேண்டும்.

மாணவர்கள் பரீட்சைக்காக மட்டும் தமது கல்வியைக் கற்காது ஒழுக்க ரீதியாகவும் பயன்பட கற்க வேண்டும். அப்போதுதான் ஒருவன் பூரண கல்விமானாகத் திகழமுடியும்.

பாடசாலையில் மாணவர் வீட்டுப் பிரச்சினைகளின் பாதிப்புடன் இருக்கக்கூடும். அந்த மாணவரின் வறுமை, வேலைக்களைப்பு போன்ற பாதிப்புகளை அறியாது அந்த மாணவரை கல்விகற்கும்படி கட்டாயப்படுத்த முயற்சிக்கக் கூடாது. அவர்களுக்கு அந்த நேரத்தில் தேவை ஆசிரியரின் ஆறுதலேயாகும். (ஒ-180)

DMN

## யார், அந்த மாணவ லட்சாதிபதி?

ஆம், யாழ்ப்பாணத்தில் முதற்றடவையாக டிஜிற்றல் மீடியா நெட் வேர்க் நிறுவனம், சுவிஸ் சிகரம் நிறுவனத்தின் ஆதரவுடன் ஐரோப் பாவில் இருந்து இயங்கும் தமிழ்த் தொலைக்காட்சி நிறுவனத்திற் காக நடத்தப்படும் **"அறிவு செல்வம்"** மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சி,

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**
**மாபெரும் நிகழ்ச்சியாம்**
**அறிவு செல்வம் 2002**
**போட்டி நிகழ்ச்சிகள்,.... அது மட்டுமா!!!**
**.இசை நிகழ்ச்சிகள் அத்துடன்**
**பாடகர், பாடகிகளுக்கான போட்டிகள்,**
**சிறப்புரைகளும் இடம்பெறுகின்றன.**

*குறிப்பு:*

பாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுபவர் சுவிற்சர்லாந் தில் நடைபெற இருக்கும் மிலேனியம் விருது விழாவில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பத்தினைப் பெறுவார்.

பங்குபற்ற விரும்பும் அனைவரும் 02.11.2002இற்கு முன் உங்கள் விவரங்களை 0777-731815 தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு பதிவுசெய்யவும்.

பார்வையாளர், போட்டியாளர்கள் அனைவரது முகங்களும் வெளிநாடுகளில் உள்ள உங்களது உறவினர் பார்க்கும் வகையில் படப்பிடிப்புகள் மேற்கொள்ளப்படுவதுடன், ஒளிபரப்பும் செய்யப்படும். பார்வையாளர்களுக்கும் பல பரிசுகள் காத்திருக்கின்றன. போட்டி கள் 06.11.2002 தொடக்கம் 13.11.2002வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.

**பார்வையாளருக்கான பிரவேசம்: 30/=**

**தமிழ்மக்களால்**
**தமிழ்மக்களுக்காக நடத்தப்படும் நிகழ்ச்சிக்கு**
***அனைவரும் உங்கள் ஆதரவினைத் தந்துதவவும்.***

(சி-245589)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவகுரு சரோஜினிதேவி

வண்ணார்பண்ணை மேற்கு, கேசாவில் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த இல.55, நாவலடி ஒழுங்கையில் வசித்த திருமதி சிவகுரு சரோஜினிதேவி அவர்கள் நேற்றுமுன்தினம்(29.10.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

. அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.55, நாவலடி ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (10077)

தகவல்:
S.சுதர்சன் (பேரன்)

## நெசவுப் பயிற்சி சான்றிதழ் பெறாதோருக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.31

கடந்த காலங்களில் தொழித் துறைத் திணைக்களத்தின் நெசவுப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களில் சான்றிதழ்களைப் பெற விரும்புவோர் நேரிலோ அன்றி கடிதம்மூலமோ யாழ்மாவட்ட தொழில் துறைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளு மாறு யாழ்.மாவட்ட அலுவலர் பி. இராகவன் கேட்டுள்ளார்.

கடிதம்மூலம் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் பயிற்சிபெற்ற நிலையத்தின் பெயர், பயிற்சிக் காலம் என்பவற்றை குறித்து அனுப்புமாறும் அவர் தெரிவித்தார்.

(ஓ-5)

## கொக்குவில் பாடசாலையின் பரிசளிப்பு தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.31

கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாட சாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் திருமதி மா. வேதநாதன் தலைமையில் இடம்பெற வுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந தினராக சமூக நலத்துறைத் திணைக் கள நலன்புரி நிலைய அத்தியட் சகர் கே.வி.சிவனேசன் தம்பதி கலந்து கொள்வர்.

(ஓ)

## ஆங்கிலம் G.C.E. O/L 2002 வகுப்புகள்

ஆங்கில இலக்கண, இலக் கிய பரீட்சை மைய வகுப்புகள
(Exam Oriented English Language Literature Classes)

*ஆரம்பம்:* 03.11.2002

*தொடர்பு:*
**கோ.சுப்பிரமணியம்**
62, பழம் றோட்,
கந்தர்மடம்.

(10086)

## ஐரோப்பிய நாட்டில் கல்வி வாய்ப்பு

ஐரோப்பிய நாட்டில் உயர் கல்வி வாய்ப்புக்களுக்கான ஒழுங்குகள் உடன் செய்துதரப்படும்.
தகுதியானவர்கள் தமது சுயவிவரத்துடன் நேரில் வரவும்.

**M.நடராஜா,**
C/o சந்திரசேகரம்,
புதிய ரயில்வே ஸ்ரேசனடி,
கண்டி வீதி, மீசாலை, சாவகச்சேரி.

(10084)

## வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம்

குடத்தனை

### பதவி வெற்றிடங்கள்

**மேற்படி எமது சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கணனி கல்வி நிலையத்தில் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு தகுதி யானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. கணனி விரிவுரையாளர்:- (Lecturer)
   தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் கணனி விஞ்ஞானத்துறை பட்டம் / அதற்குச் சமமான உயர் தகைமைகள்.
2. கணனி செய்முறைக் காட்டுநர்:- (Demonstator)
   தகைமை:- Ms office உள்ளடங்கலான Diploma சான்றிதழ்.
3. ஆங்கில ஆசிரியர்:-

- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- அனுபவம் இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பங்கள் யாவும் 08.11.2002 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப் படுதல் வேண்டும்.

எஸ்.சிவானந்தராசா (செயலாளர்),
சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம்,
குடத்தனை, வடமராட்சி கிழக்கு.

**- செயலாளர்.**

(10078)

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் கடமையாற்றும்
திருமதி சாந்தகுணதேவி நாகராசா
அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி பொன்னம்மா குமரகுரு

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின் றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

- நிலைய உத்தியோகத்தர்கள், கமநல சேவைக்குழு,
கமநல சேவை நிலையம், கீரிமலை.

(10076)



# எல்லோரும் கூரைக்கு மேல...! முழுப்பேரும் ஸ்ரைக்...





அன்றிலிருந்து மக்களின் அபிமானத்தை வென்று உறுதியின் மறுவடிவமாக என்றும் முன்னணியில் திகழும்...

## யானை மஸ்கனைட்

கூரைக்கும் சீலிங்கிற்கும்

## உறுதியின் மறுவடிவம்

அஸ்பெஸ்டஸ் சிமென்ற் இன்டஸ்ரீஸ் லிமிட்டட்.

விநியோகத்தர்கள்:

மஸ்கன்ஸ் லிமிட்டட்.
175 ஸ்ரீ சுமணதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 12.
தொலைபேசி: 325561-3

பில்டிங் மற்றீரியல் கோப்பரேசன் லிமிட்டட்.
541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு12.
தொலைபேசி: 326701-5

மற்றும் நாடளாவிய கிளைகள்

# அரசு – புலிகள் செயலணிக் குழுவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள்

அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து அமைக்கவுள்ள செயலணிக் குழுவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க சில கட்சிகள் தயாராகி வருவதாகத் தெரிய வருகின்றது.

குறிப்பாக ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய ஆகிய கட்சிகள் இச்செயலணிக் குழுவை வன்மையாக எதிர்க்கின்றன.

அரசு - புலிகள் செயலணிக் குழுவின்மூலம் வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பணிகளையும், மீள்குடியேற்றம் போன்ற நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் செயலானது உத்தியோகபூர்வமாகத் தனிநாட்டைப் புலிகளுக்கு வழங்குவதற்கு ஒப்பானது என ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சிஹல உறுமய கட்சியும் இதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. (ஒ)

## கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் கண்காட்சியில் BRIGHT இன் புத்தக விற்பனை

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நவம்பர் முதலாம், 2ஆம் திகதிகளில் நடைபெறும் கல்விக் கண்காட்சியில் BRIGHT BOOK CENTREஇன் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறும்.

இதில் விற்பனைக் கழிவாக 10% முதல் 50% வரை வழங்கப்படும். அடுத்த கண்காட்சியும் புத்தக விற்பனையும் நவம்பர் 5ஆம், 6ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பில் நடைபெறும்.

மாணவர்களுடன் சமுகம் தரும் பாடசாலைகளின் நூல் நிலையத்திற்கு 1000/- ரூபா பெறுமதியான புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

**BRIGHT BOOK CENTER [PVT] LTD.**
**P.O. Box 162**
**COLOMBO.**

(10103)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க வங்கிச் சேவை முகாமையாளரும் தொழிற்சங்கச் செயலாளரும் சிக்கன சேமிப்புச் சங்கத் தலைவருமாகிய திரு.நல்லையா கணேசலிங்கம் அவர்களுடைய அன்புச் சகோதரி உரும்பிராய் வடக்கு

**திருமதி புனிதவதி இராமலிங்கம்**

அவர்கள் 27.10.2002 அன்று இயற்கையெய்தியமையையிட்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அமரரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்,
வலி.கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(10087)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வல்லிபுரம் சிவசுந்தரம்**

திதி : தசமி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1940 - 08 - 07 | 1997 - 10 - 26 |

அன்பாய் பண்பாய் எமை வளர்த்த அப்புாவே!
ஆண்டு ஐந்து ஆனதப்பா மறக்கவில்லை உன் வதனம்
அன்பிற்கும் அறத்திற்கும் அர்த்தத்தைக் கற்பித்தீர்!
வாழ்க்கையை அதுவெனவே வாழ்ந்து முடிந்தீரே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உசன், மிருசுவில்.* (10098) - குடும்பத்தினர்.

## வேலணையில் 3 குளங்கள் புனரமைப்பு

ஊர்காவற்துறை,ஒக்.31

வேலணை கமநல சேந்திர நிலையப் பிரிவில் உள்ள மூன்று விவசாயக் குளங்கள் தற்பொழுது உலக உணவுத்திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படுகின்றன.

சுருவில்குளம், வேலணை முந்தாய்குளம், அல்லைப்பிட்டி பெரிய மண்குளிகுளம் ஆகியனவே இவ்வாறு புனரமைக்கப்படுகின்றன.

அந்தந்தப் பகுதி விவசாய சம்மேளங்களின் உதவியுடன் விவசாயிகளின் பங்குபற்றலுடன் இக்குளங்களின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வேலணை கமநல கேந்திரநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இவ்வாறு புனரமைப்புப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு நாளொன்றுக்கு 2.5 கிலோகிராம் அரிசி, 150 கிராம் சனி, 100 கிராம் தேங்காய் எண்ணெய், 25 கிராம் ரின் மீன் ஒன்று ஆகியன வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-16)

## சுகாதாரத் தொண்டருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.31

வடமராட்சி சுகாதாரத் தொண்டர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் நவம்பர் மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## இலங்கைக்கு 4கோடி யூரோ நிதியுதவி

கொழும்பு,ஒக்.31

ஐரோப்பிய முதலீட்டு வங்கி இலங்கைக்கு 4கோடி யூரோவை நிதியுதவியாக வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான அனுமதியை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளது.

இலங்கையின் புனர்வாழ்வு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்தப் பணம் செலவிடப்படவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-4)

## ஹபரணையில் கொலை, கொள்ளை!

கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற மீன் லொறியின் சாரதியும் உதவியாளரும் இனம் தெரியாத நபர்களால் ஹபரணப் பகுதியில் வைத்துக் குத்திக்கொலை செய்யப்பட்டனர்.

ஹபரணையில் உள்ள காட்டுப் பகுதியில் இந்தக் கோரச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

லொறியை இடைமறித்த இனம் தெரியாத நபர்கள் சாரதி அஜித் ரூபசிங்க, உதவியாளர் முருகேசு அன்ரனி ஆகியோரை கத்தியால் குத்திக்கொலை செய்துவிட்டு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

கொலை செய்யப்பட்ட முருகேசு அன்ரனியின் சடலம் அப்பகுதியில் உள்ள குளத்தில் இருந்து மீட்கப்பட்டது.

சாரதியின் சடலம் லொறிக்குள்ளேயே இருந்தது.

பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ)

## தவறிவிட்டது

இல.24, குமரபுரம், பரந்தனைச் சேர்ந்த சபாரட்ணம் சுபாகரன் என்பவரது தே.அ.அட்டை (இல. 780021560V) யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் R.T.S.கடல் உணவு வாணிபம், நாவாந்துறை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(10104)

## அனலைதீவு மருத்துவமனைக்கு மின்சாரம்

அனலைதீவு ஒக். 31

கிராமிய மின் திட்டத்தின் கீழ் அனலைதீவு மருத்துவமனைக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது இதுவரை காலமும் அரிக்கன் விளக்கு வெளிச்சத்திலேயே மருத்துவப் பணிகள் இடம்பெற்றுவந்தன.

இந்த மருத்துவமனைக்கு அனலைதீவு, 6ஆம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி ஞானாம்பாள் என்பவர் மண்ணெண்ணெய் குக்கர், அரிக்கன் லாம்பு, வாளிகள், சுவர் மணிக்கூடு உட்படப் பல பாவனைப் பொருள்களை அன்பளிப்புச் செய்துள்ளார். (ஒ-ரி)

## இதய அஞ்சலி

"உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்" *(யோவா 11:26)*



எம் பங்குத்தந்தை அருட்திரு. பயஸ் இருதயதாஸ் அடிகளாரின் அன்னையாகிய **பயஸ் றெபேக்கா** அவர்கள் காலமாகியதையிட்டு மிகவும் துயருறுகிறோம். இவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் பங்குத்தந்தை அவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அவரது ஆத்மசாந்திக்காக எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

பங்கு மக்கள்,
புனித தோமையார் ஆலயம், பருத்தித்துறை. (10108)

## துயர் பகிர்வோம்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே" *(யோவா 11:25)*



எமது பங்குத்தந்தை அருட்திரு. பயஸ் இருதயதாஸ் அடிகளாரின் அன்புத் தயார்

**பயஸ் றெபேக்கா**

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து, பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், பங்குத்தந்தைக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய குழந்தை யேசுவைப் பிரார்த்திக்கிறோம்.

பங்கு மக்கள்,
புனித சூசையப்பர் ஆலயம், புலோலி. (10111)

## கண்ணீர் அஞ்சலி

"அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்" *(உரோ 6:5)*



எமது பங்குத் தந்தை அருட்திரு. பயஸ் இருதயதாஸ் அடிகளாரின் அன்புத் தயாராகிய **பயஸ் றெபேக்கா** அவர்களது மறைவு குறித்து நாம் பெரிதும் துயருறுகின்றோம். அவரது பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும் பங்குத் தந்தை அவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பங்கு மக்கள்,
புனித அந்தோனியார் ஆலயம், பருத்தித்துறை. (10110)

## இதய அஞ்சலி



எமது பங்குத்தந்தை அருட்திரு. பயஸ் இருதயதாஸ் அடிகளாரின் அன்புத் தாயார் **பயஸ் றெபேக்கா** அவர்கள் 29.10.2002 அன்று காலமானதையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம். அன்னாரின் மறைவால் துயரில் மூழ்கியிருக்கும் பங்குத் தந்தைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து, ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது" *(1 கொரி 15:42)*

பங்கு மக்கள்,
(10112) புனித செபஸ்தியார் ஆலயம், கற்கோவளம்.

## கண்ணீர் அஞ்சலி

"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவா 11:25)



எமது பங்குத்தந்தை அருட்திரு. பயஸ் இருதயதாஸ் அடிகளாரின் அன்னையாகிய **பயஸ் றெபேக்கா** அவர்கள் 29.10.2002 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். இத்துயரச் செய்தி கேட்டு நாம் மிகவும் துக்கமடைந்தோம். இவரது பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும் பங்குத்தந்தை அவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா இறைவனின் இரக்கத்தில் அமைதியடையப் பிர்த்திக்கின்றோம்.

- பங்கு மக்கள் -
(10109) புனித சவேரியர் ஆலயம், சற்கோட்டை.

## பிரிவுத் துயர் பகிர்கின்றோம்

"கிறிஸ்துவின் வருகையின்போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர்" *(1 கொரி 15:23)*




எம் பங்குத்தந்தை அருட்திரு. பயஸ் இருதயதாஸ் அடிகளின் அன்பு அன்னையாகிய **பயஸ் றெபேக்கா** அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆலயச் சமூகம் அதிர்ச்சியடைந்துள்ளது. அன்னாரின் ஆன்மா இறைவனின் இரக்கத்தில் என்றும் அமைதியுடன் இளைப்பாற பாலகன் யேசுவைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் பங்குத் தந்தைக்கும், குடும்பத்தாருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பங்கு மக்கள்,
(10114) குழந்தை யேசு ஆலயம், பொலிகண்டி.

## கண்ணீர் அஞ்சலி

"இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர்" *(திருவெளிப்பாடு 14:13)*



எமது பங்குத்தந்தை அருட்திரு. பயஸ் இருதயதாஸ் அடிகளாரின் அன்பு அன்னையாகிய **பயஸ் றெபேக்கா** அவர்கள் 29.10.2002 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமான செய்திகேட்டு மிகவும் துயரடைகிறோம். அவரது மறைவால் துயருற்றிருக்கும் பங்குத்தந்தைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

பங்கு மக்கள்,
(10113) மரியன்னை ஆலயம், தும்பளை.

## யாழ் குடாநாட்டின் வெப்பநிலை 32°C

சூரியக்கதிர்களின் தாக்கங்களிலிருந்து எம் பெண்களின் அழகும், வெண்மையும், பொழிவும் பாதுகாக்கப்பட பாவியுங்கள்

*Freshia*
அழகின் பரம ரகசியம்




ஏக. விநியோகஸ்தர்:- JEGHAN PHARMACY
No.462/B, Hospital Road, Jaffna. Tel.021-2194, 3191




வலி வடக்கு ஆர்ப்பாட்டப்பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள் தேவராஜன்)*





மகஜர் கையளிப்பு

# அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மீளக்குடியமர அனுமதிக்காவிட்டால் மண் மீட்புப் போர் தவிர்க்க முடியாது!

## வலி.வடக்குப் பேரணியில் அரசுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்31

**அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு, அப்பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் அங்கு குடியமர அனுமதிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படாத பட்சத்தில் மண் மீட்புப் போர் தொடரப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.**

**வலி.வடக்கில் நேற்று இடம்பெற்ற பேரணியின் முடிவில் உரையாற்றிய தலைவர்கள் இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களின் பயனாக அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு எமது மக்கள் தமது சொந்த மண்ணில் மீளக் குடியமர அரசு அனுமதிக்கவேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் மண் மீட்கும்வரை தொடர் போராட்டங்களை நாம் முன்னெடுப்பது தவிர்க்கமுடியாததாகும்.

இப்படிக் கூறினார் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

வலி.வடக்கு மக்களை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் என்று கோரி நேற்று நடத்தப்பட்ட பேரணியை அடுத்து வலி - வடக்கு பிரதேச செயலர் அலுவலகம் முன் நடத்தப்பட்ட எழுச்சிக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

வலி.வடக்கு, தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சி.குமாரவேல் தலைமையில் நடந்த இந்தக்கூட்டத்தில் சேனாதிராசா பேசுகையில் மேலும் கூறியதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி எட்டுமாதங்களாகிவிட்டன. அமைதிச் சூழல் ஏற்பட்டது. ஆனால், மக்களின் இயல்பு வாழ்க்கை இன்னுமும் திரும்பவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பயனாக மீண்டும் தமது சொந்த மண்ணுக்குத் திரும்புவோம் என வலி. வடக்கு மக்கள் ஆதங்கப்பட்டார்கள். 17 வருட கால அவல வாழ்க்கைக்கு முடிவுகிட்டும் என நம்பிக்கை கொண்ட மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

மக்கள் குடியிருப்புக்களில் இருந்து இராணுவத்தை முற்றாக வெளியேற்றி தம்மை தமது பகுதிகளில் அரசு குடியமர்த்தும் என நம்பிய மக்களின் மனதில் அரசு மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது. அந்த வெறுப்பின் பிரதிபலிப்பே இன்றைய பேரணியும் கூட்டமும் ஆகும்.

பிரதமருடன் கூட்டமைப்பு பிரதிநிதிகள் நடத்திய தொடர் பேச்சுக்களின் பயனாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சுச் செயலர், முப்படைத் தளபதிகள் சில வாக்குறுதிகளை அளித்தனர். ஆனால், இன்று அந்த வாக்குறுதிகள் வாபஸ் பெறப்பட்டு வருகின்றன.

மண்மீட்புக்காக ஆரம்பமான ஆயுதப்போர் இன்று ஓய்வடைந்து சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. இந்த ஆயுதப் போர் ஏன் ஆரம்பித்தது என்பதை அறியாது அரசு செயற்படுமாயின் மீண்டும் மண்மீட்கும் போர் ஆரம்பமாவது தவிர்க்க முடியாததாகும்.

இன்று போர் ஓய்ந்து சமாதான சூழ்நிலை ஏற்பட்ட போதும், போரின் இலக்கு இன்னமும் எட்டப்பட்டவில்லை. அந்த இலக்கு எட்டப்படும் போதுதான் தமிழன் நிம்மதியாக வாழமுடியும்.

இயல்பு வாழ்க்கை என்றால் ஆக்கிரமித்துள்ள இராணுவம் வெளியேற்றப்பட்டு, மக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படாவிட்டால், தொடர் போராட்டங்கள் தவிர்க்க முடியாததாகிவிடும்.

மண்மீட்புப் போரை நாம் தலைமை தாங்கி முன்னெடுத்து மக்களின் அவலத்தை சர்வதேசத்துக்கும் பேரினவாத அரசுக்கும் காட்ட வேண்டிய தேவை ஏற்படும் - என்றார் அவர்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார் பேசுகையில் கூறியதாவது:-

மக்கள் குடியிருப்புக்களை அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் எனப் பிரகடனம் செய்து மக்கள் மீள்குடியமர்வதைத் தடுப்பது, புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலாகும். புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த படையினர் தயாரில்லை அவர்களுக்கு போர் புரியத்தான் தெரியும். அதுவும் சரியாகத் தெரியுமோ தெரியாது.

படை அதிகாரிகள் வழியில் சென்றால் எமது மண் மீட்கப்படாது. எனவே, எமது மண் மீட்புப் போர் தொடரப் போகின்றது என்ற செய்தியை அரசுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம் - என்றார்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

'விடுதலைப் புலிகள் வெல்லப்பட முடியாதவர்கள். எனவே புரிந்துணர்வு உடன் படிக்கையை முறைப்படி நடைமுறைப்படுத்துங்கள்' என்று நாம் அரசிடம் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றோம். நாம் வெறும் ஏமாளிகள் என்ற நிலையில் அரசு செயற்பட்டு வருகின்றது. அதற்கு நாம் ஒரு போதும் ஏமாறப் போவதில்லை.

எமது மக்கள் நசுக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு பேசா மடந்தைகளாக நாம் இருக்கப் போவதில்லை.

எமது மக்களுக்கு எதிரான அநீதிகளை எதிர்த்துப் போராடுவோம். அதி உயர் உச்ச பாதுகாப்பு வலயம் என்ற மாயையைக் காட்டி, மக்களை சொந்த இடங்களில் குடியமர அரசு அனுமதிக்காவிட்டால், மீண்டும் ஒரு போருக்கு விடுதலைப் புலிகளைத் தள்ளவே அரசு முனைகின்றது என்று நாம் கருதுகின்றோம் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான அ.விநாயகமூர்த்தி பேசுகையில் கூறியதாவது :-

புரிந்துணர்வு உடன்படிக்கை கொண்டுவரப்பட்டது, வடக்கு - கிழக்கில் சகஜநிலையை கொண்டு வருவதற்காகவேயாகும். ஒரு மாத காலத்துக்குள் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் எமது பிரதேசத்துக்குள் செல்வோம். எம்மைச் சுட்டுத் தள்ளுவர். வேறு என்ன செய்ய முடியும் - என்றார் அவர்.

இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த கே.செந்திவேல், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், நல்லூர் - யாழ்ப்பாணம் பொது அமைப்புக்களின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உட்படப் பலர் உரையாற்றினர்.

(ஒ-3-8-86)

## ரீ.ரீ.என். வினாவிடைப் போட்டியில் பங்கேற்கும் மாணவ மாணவியர்

யாழ்ப்பாணம்,ஒக்.31

தமிழ்த் தொலைக்காட்சி இணையம் (ரி.ரி.என்.) குடாநாட்டு மாணவர்களிடையே நடத்தும் வினாவிடைப் போட்டி நிகழ்ச்சிக்காக பாடசாலை ரீதியாக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவ, மாணவியரில் ஒரு தொகுதியினரின் பெயர் விவரம் பாடசாலை ரீதியாக வருமாறு:-

**சோமஸ்கந்தக் கல்லூரி**

இரத்தினசிங்கம் சிந்துஜா, விஷ்ணுசிங்கம் தயாளினி, குணசீலன் தர்சன், சிவராஜா சிவகௌரி, சின்னத்துரை ஜீவனா, தயானந்தன் அம்பிகா, ஆறுமுகம் வானதி, ஆனந்தக்கிருஷ்ணன் கமலக்குமரன், நல்லையா சிவசாந்தினி, புலேந்திரகுமார் சுகன்யா, சுந்தரலிங்கம் நிறோஜா, சின்னத்துரை கோபிக்கிருஷ்ணா, பத்மநாதன் விஷ்ணுரூபன், மகேந்திரன் செல்வகாந்தி, இராசரத்தினம் கேதாரணி, அழகதுரை தனுஷியா, கதிர்காமநாதன் திருவேணி.

**இடைக்காடு மகா வித்தியாலயம்**

பாலசிங்கம் தாரணி, தமோதரன் பிரதாபன், சிற்சபேசன் சர்மினி, சிவஞானசுந்தரம் சுகீசன், நடராசா தணிகைக்குமாரன்

**அச்சுவேலி மத்திய கல்லூரி**

சின்னராசா குறிஞ்சி, நாகராசா சமிந்தன், சுபாரட்ணம் சோபிதா, சிவசுப்பிரமணியம் யனுஷா, சிவசுப்பிரமணியம் ஜனகன், பத்மநாதன் விஜயரஞ்சன், குகேஸ்வரன் சிவசுதன்.

**புனித திரேசா மகளிர் கல்லூரி**

விருத்தகுரீசக்குருக்கள் விக்னேஸ்வரி, சின்னத்துரை வாசுகி, எட்வின் ஜோஜ் அல்க்சியா, வேலுப்பிள்ளை சுதர்சினி, சரவணமுத்து தமிழ்ச்செல்வி.

**அத்தியார் இந்துக் கல்லூரி**

செல்வராசா யசோதா, தெய்வேந்திரன் இராசேந்திரன், அரசரத்தினம் வசந்தரூபி, சிதம்பரநாதன் சஜீவன், வேலாயுதம் பிரகாஸ், சிவராசா தமிழ்ச்செல்வன், சுப்பிரமணியம் அம்பிகா, சின்னத்தம்பி விஜிதா. (ஒ)

## தாதிகள்பயிற்சிக்கு தெரிவானோர் பட்டியல்

யாழ்ப்பாணம்,ஒக்.31

தாதிகள் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளோரின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் யாழ். போதனா வைத்தியசாலையிலும் தாதிகள் பயிற்சிக் கலாசாலையிலும் இன்று பார்வையிடலாம் என்று வைத்தியசாலை நிர்வாக அதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-ரி)

## பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்.31

கடந்த 2 ஆம் திகதி பருத்தித்துறையில் நடந்த பேரணியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக தடுத்துவைக்கப்பட்டிருந்த பருத்தித்துறையைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் நேற்றுமுன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## நாரந்தனை தாக்குதல் வழக்கு: டிசெம்பருக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.31

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி தமிழ்க் கூட்டமைப்பினர் மீது நாரந்தனையில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கின் சாட்சிகள் எவரும் நேற்றுமுன்தினம் நீதிமன்றுக்குச் சமுகமளிக்காத காரணத்தினால் வழக்கு விசாரணை டிசம்பர் மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கு யாழ்.நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஈ.பி.டி.பி. உறுப்பினர் ந.மதனராஜா எம்.பி. உட்பட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

ஆயினும் சாட்சிகள் எவரும் ஆஜராகாததை அடுத்து வழக்கு விசாரணையை டிசெம்பர் மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்த யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா சாட்சிகளுக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்புமாறும் பணித்துள்ளார். (ஒ-10)

# வறுமை ஒழிப்புப் பணியில் தேசிய சேமிப்பு வங்கி



சேமிப்பு வங்கி என்னும் எண்ணக்கரு உருவான ஆரம்பகாலத்திலிருந்து, சுயஉதவி, சிறுதொழில் அபிவிருத்திகளூடாக வறுமை ஒழிப்பை ஏற்படுத்துவதே அதன் முக்கிய நிலைப்பாடாக இருந்துவந்துள்ளது. 1810ஆம் ஆண்டில் ஸ்கொட்லாந்தில் டம்பிரஸ்சயர் என்னும் பின்தங்கிய மாவட்டமொன்றின் சிறிய கிராமத்தில் வசித்த ஏழை மக்களுக்கு அவர்களின் ஆலய குருவாயிருந்த ஹென்றி டங்கன் உருவாக்கிய ஒரு சாதாரண அமைப்பாக முதன் முதலில் சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது. இடர்காலத்திலும், குறை விளைச்சல்களினாலும் பாதிக்கப்படுவோருக்கு உதவுவது இச்சேமிப்பு வங்கியின் முக்கிய நோக்கமாக இருந்தது.

சேமிப்பு வங்கி ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து 100 ஆண்டுகளுக்குப் பிறகு 1924இல் மிலானில் இடம்பெற்ற சர்வதேச சேமிப்பு வங்கிகளில் காங்கிரஸில், சமுதாயத்தினரிடையே சிக்கனம் பற்றிய அவதானிப்பை ஏற்படுத்தவும், சேமிக்கும் பழக்கத்தை மேம்படுத்தவும் ஒவ்வோர் ஆண்டின் ஒக்ரோபர் 31ஆம் திகதியையும் உலக சிக்கனத்தினமாக, சர்வதேச ரீதியில் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அப்போதிருந்து உலகின் பெரும்பாலான நாடுகள் தத்தமது சேமிப்பு வங்கி நிறுவனங்களூடாக உலக சிக்கனத்தினத்தை ஆண்டுதோறும் கொண்டாடுகின்றன. உலக சிக்கனத் தினத்தின் 78ஆவது ஆண்டு விழாவை இன்று தே.சே.வயும் கொண்டாடுகின்றது.

கவர்னர் ரொபர்ட் வில்மட் ஹோர்டன் அவர்கள் 1832 ஆகஸ்ட் 6ஆம் திகதி இலங்கை சேமிப்பு வங்கியை நிறுவுவதற்கு முன்னோடியாக இருந்து செயற்பட்டார். கடந்த நூற்றாண்டில், அரச கவுன்சிலில் சிறந்த நாவண்மையுடன் சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றிய, சிறிய மனிதர்களுக்கு ஏற்ற சேமிக்கும் மனப்பாங்கு எனும் உரையின் கருத்தாக்கம் 1885 ஆம் ஆண்டில் அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கிகளை ஏற்படுத்துவதற்கான விசையை முடுக்கிவிட்டதென நிச்சயமாகக் கருதலாம்.

சேமிப்புகளைத் திரட்டுவதற்கு சக்திவாய்ந்த மத்திய நிறுவனம் ஒன்றை அமைப்பதற்கான தேவை உணரப்பட்டமையால் இவ்விரு வங்கிகளுடன் அஞ்சல் அதிபதியின் திணைக்களச் சேமிப்புச் சான்றிதழ் பிரிவு (1938), தேசிய சேமிப்பு இயக்கம் (1942) ஆகியவையும் ஒன்றிணைக்கப்பட்டு 1972ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கி ஸ்தாபிக்கப்பட்டது.

**டீ.எம்.சுவாமிநாதன்**
*தலைவர்,*
*தேசிய சேமிப்பு வங்கி.*

1972இல் தே.சே.வ. ஸ்தாபிக்கப்பட்டது முதல், இன்றுவரை உள்ளூர் சேமிப்புகளை அதிகரிக்க பல்வேறு சேமிப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு ரூபா 120 பில்லியனுக்கும் அதிகமான தொகை திரட்டப்பட்டுள்ளது.

"பிரெண்ட்ஸ்" வைப்புக் கணக்கில் ஒருவர் ஆகக் குறைந்த தொகையாக ரூபா 100/= அல்லது அதன் மடங்குகளில் குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்கு (தற்போது 90 மாதங்கள்) மாதாந்தம் வைப்புச் செய்தல் வேண்டும். அக்காலப்பகுதியின முதிர்வில் வைப்பாளர் அல்லது வைப்பாளர் நியமிக்கும் ஒருவர் வைப்பாளரது மாதாந்த வைப்புக்குச் சமமான தொகையை ஆயுட்காலம் முழுவதும் மாத வருமானமாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் நன்மை கருதி, வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு நிதி மாற்றம் செய்யும் நடைமுறைகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் தே.சே.வ. கடந்தவாரத்தில் இரு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளது. டுபாயில் உள்ள வோல் ஸ்ட்ரீட் எக்ஸ்சேஞ் சென்டர், எல்.எல்.சி., முசாண்டம் எக்ஸ்சேஞ் ருவி, ஓமான் என்னும் இந்நிறுவனங்கள், நிதி மாற்றும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள முன்னணி நிறுவனங்களாகும்.

குடும்ப சேமிப்பு வங்கி எனும் தனது கோட்பாட்டின் அடிப்படையிலும், வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கு முழுமையான சேவைகளை வழங்குவதற்காகக் கைச்சாத்திட்ட இரு ஒப்பந்தங்களினூடாகவும், இதுவரைகாலமும் இலங்கையின் வர்த்தக வங்கிகளே முழு ஆதிக்கம் செலுத்திவந்த வங்கிச் செயற்பாடுகளில் இப்பொழுது தே.சே.வயும் முழு ஊக்கத்துடனும் சிறந்த செயற்திறனுடனும் உள்நுழைய முடிந்துள்ளது.

தமது தேசத்தைக் கட்டியெழுப்பும் தீவிர முயற்சியில் இலங்கை மக்கள் ஈடுபட்டுள்ள இந்நேரத்தில், எமது நாட்டின் மிகக் குறைந்த பிரஜையும்கூட இவ்வுன்னத முயற்சிக்கு தனது பங்களிப்பை வழங்குவதற்கு உதவும் வகையில் தேசிய சேமிப்பு வங்கி தொடர்ந்தும் தேசத்தின் நலனுக்குத் தன்னை அர்ப்பணித்து முக்கிய பங்கினையாற்றும். ★





உலக சிக்கனத் தினமான இன்று உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி தே.சே.வ பெருமையுடன் வழங்கும் மற்றுமொரு ஆயுட்கால சேமிப்பு வருமானம் "ப்ரெண்ட்ஸ்".

தேசிய சேமிப்பு வங்கியின் வைப்பீட்டு சேமிப்புத் திட்டமாகிய "ப்ரெண்ட்ஸ்" வைப்பாளர்களின் வாழ்நாள் முழுவதற்குமான மாதாந்த வருமானமொன்றை உறுதிசெய்கிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை எந்த வயதினரும் இத்திட்டத்தின் அனுகூலங்களினால் பயன்பெறலாம். நீங்கள் 18 வயதிற்கு மேற்பட்டவரானால் உங்கள் பெயரிலோ அல்லது வேறெவரினதும் சார்பிலோ "ப்ரெண்ட்ஸ்" கணக்கொன்றை ஆரம்பிக்கலாம்.

உங்களுக்கு அண்மையிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளை அல்லது தபால் வங்கிக் கிளையில் ஆகக் குறைந்த தொகையாக ரூ. 100/- அல்லது அதன் மடங்குகளை வைப்பிலிட்டு கணக்கொன்றை ஆரம்பியுங்கள். குறிப்பிட்டவொரு காலத்திற்கு சமசீரான ஒரு தொகையை மாதாந்தம் வைப்பிலிட்டு வருவீர்களாயின் குறிக்கப்பட்ட காலகட்டம் பூர்த்தியடைந்ததன் பின்னர் நீங்கள் மாதாந்தம் வைப்பிலிட்ட தொகைக்கு சமமான ஒரு தொகையை வாழ்நாள் முழுவதும் மாத வருமானமாக பெற்றுக்கொள்வீர்கள். உங்கள் இலக்குத் தொகையை மொத்தமாகச் செலுத்தி தொடர்ந்துவரும் மாதம் முதலே மாதாந்த வருவாயைப் பெற்றுக்கொள்ளவும் உங்களுக்கு வாய்ப்புண்டு.

சுயதேவைக் கடன் ஒன்றைப் பெறுவதற்கு பிணையாகவும், சேமிப்பாளர் வீடமைப்புக் கடன் விண்ணப்பிப்பதற்கான உத்தரவாதமாகவும் ப்ரெண்ட்ஸ் கணக்கைச் சமர்ப்பிக்கலாம். வைப்பீட்டுக் காலத்தில் வைப்பாளர் மரணமடைய அல்லது அங்கவீனமடைய நேர்ந்தால் மாதாந்த வைப்பீட்டை தொடர்ந்து செலுத்துவதற்கு ரூ. 500,000/-க்கு மேற்படாத காப்புறுதிக் காப்பும் வழங்கப்படும்.

உங்கள் பெயரிலோ அல்லது வேறெவரினதும் சார்பிலோ ப்ரெண்ட்ஸ் கணக்கொன்றை ஆரம்பிக்க அண்மையிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையை நாடுங்கள். ப்ரெண்ட்ஸ் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கும் அதன் அனுகூலங்களை நீங்கள் அனுபவிப்பதற்கும் உங்களுக்கு உதவ தேசிய சேமிப்பு வங்கி காத்திருக்கின்றது.

NSB

ப்ரெண்ட்ஸ் என்றென்றும்

LOWE LDB



யாழ்ப்பாணம் மாநகர சபை

## யாழ்ப்பாண பொதுசன நூலகம்

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் வரலாற்றை பூரணமாகத் தயாரித்து ஆவணப்படுத்த யாழ்ப்பாண மாநகர சபை தீர்மானித்துள்ளது. இவ்வாவணத்தைத் தயார் செய்வதற்கு நூலக வரலாற்று ஆவணங்களை பாதுகாத்து வைத்திருக்கும் நலன் விரும்பிகள் அவற்றினை பிரதம நூலகரிடம் வழங்கி பூரணமான ஆவணம் ஒன்றைத் தயாரிக்க ஒத்துழைக்குமாறு அன்பாக வேண்டுகின்றேன்.

ஆவணங்களின் மூலப்பிரதிகள் தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் உரிமையாளருக்கு திருப்பிக்கொடுக்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றேன்.

(சி-24593)

**இ.இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### பிரதீவ் மாணிக்கவாசகர்

கரணவாய் வடக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த பிரதீவ் மாணிக்கவாசகர் அவர்கள் ஸாம்பியாவில் அகாலமரணமானார்.

அன்னார் மாணிக்கவாசகர் (Accountant Formerly of Paper Mills Corporation) - கமலாதேவி (Teacher, Formerly of St.Bridget Convent- Colombo) தம்பதியினரின் அன்புப் புத்திரனும் சஞ்ஜீவ், ஷாலினி ஆகியோரின் அருமைச் சகோதரனும் கரணவாய் வடக்கு காலஞ்சென்ற சட்டத்தரணி பொ.கணபதிப்பிள்ளை (முடிவில்) தம்பதியினரதும் காலஞ்சென்ற R.D.சிவகுருநாதன் தம்பதியினரதும் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.10.2002) புதன்கிழமை ஸாம்பியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரணவாய் வடக்கு,*
*உடுப்பிட்டி.* (10092)

தகவல்:
**Dr.G.கேதீஸ்வரநாதன் (சித்தப்பா)**

### நல்லதம்பி செல்லையா

புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது பொன்னையா ஒழுங்கை, வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி செல்லையா நேற்று (30.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நல்லதம்பி - செல்லாச்சியின் அன்பு மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் தனலெட்சுமி, காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் அம்பிகாவதி, ஜெயலட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களாகிய விசாலாட்சி, பொன்னம்பலம், சின்னத்தம்பி, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் நடராசா (லண்டன்), குருநாதசிவம் (உரிமையாளர், சிவா நறுமணப் பூங்கா, யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சிவகுமார் (லண்டன்), சசிகலா (கனடா), பிருந்தா (லண்டன்), சுரேஸ்குமார், ரமேஸ்குமார், பிரியா, சங்கீதா, நிலானி (ஜேர்மனி), நிசாந் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னையா ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*வடமேற்கு, ஆனைக்கோட்டை.*

தகவல்:
**த்.குருநாதசிவம்**
**(உரிமையாளர், சிவா நறுமணப் பூங்கா)**
(10093)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 418 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 29.10.2002 | செல்லுபடியாகும் தொடர் இல. 4542104-4555790 | |

வெற்றி இலக்கங்கள் **20 28 29 45**

லக்கினம்: கும்பம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,675,250/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 302,287 | 10 | 3,022,870 |
| 2 இலக்கங்கள் | 27,772 | 20 | 555,440 |
| 1 இல + லக்கினம் | 27,533 | 30 | 825,990 |
| 2 இல + லக்கினம் | 2,511 | 100 | 251,100 |
| 3 இலக்கங்கள் | 741 | 500 | 370,500 |
| 3 இல + லக்கினம் | 69 | 5,000 | 345,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 360,917 | - | 5,770,900 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,770,900/-

தொடர் இல. 5539160க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 01ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4544086-8-93
4546414-2-59
4548000-8-68
4554716-8-19
4550577-4-88

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX OBM







கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட கதே பசுபிக் விமானத்தில் விடுதலைப் புலிகளின் தரப்பு பிரதிநிதிகளான கேணல் கருணா மற்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் பத்திரிகைகளைப் படித்தபடி பயணிப்பதை முதலாவது படத்திலும் -

தாய்லாந்தைச் சென்றடைந்தபின் அங்குள்ள ஹோட்டலில் கலந்துரையாடும் விடுதலைப் புலிகளின் தரப்புப் பிரதிநிதிகளையும் அங்கு வைத்து பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளிக்கும் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியரும் புலிகள் தரப்பு சமாதானப் பேச்சுக் குழுவின் தலைவருமான அன்ரன் பாலசிங்கத்தையும் மற்றவை இரு படங்களிலும் காணலாம்.


## சர்வதேச அரிமாக் கழகம்

We Serve

மாவட்டம் 306 B
பிராந்தியம் - 09, வலயம் - 01

**மாவட்ட ஆளுநரின் கழகங்களுக்கான விஜயம்.**

வலயம் 01இற்குக் கீழ் உள்ள அரிமாக் கழகங்களான யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய் பரிஷ, இணுவில் ஆகிய கழகங்கள் ஒன்றிணைந்து மாவட்ட ஆளுநரின் விஜயத்தை இன்று (31. 10. 2002) வியாழக்கிழமை மாலை 6. 00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடத்துகின்றன. அரிமாக்கழக உறுப்பினர் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு வலயத் தலைவர் லயன் ச.ரவீந்திரா அவர்களும் இக் கழகங்களின் தலைவர்களும் கேட்டுக்கொள்கின்றனர்.

யாழ்ப்பாணம் தலைவர் லயன் S.சுந்தரலிங்கம்.
கோப்பாய் தலைவர் லயன் K.இராசதுரை.
மானிப்பாய் தலைவர் லயன் M.தியாகராஜா.
இணுவில் தலைவர் லயன் Dr.T.அமிர்தலிங்கம்.
(C-24596)

## விளையாட்டு முகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து (சகலதுறை விளையாட்டுக்கும்) விண்ணப்பங்கள் 10.11.2002இற்கு முன்னர் பெறப்படவுள்ளன.

★ 50 வயதுக்கு மேற்படாத திடகாத்திரமானவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

செயலாளர்,
ஹாட்லிக் கல்லூரி, பழையமாணவர் மன்றம்.
பருத்தித்துறை.
(C-24595)


## கெற்பேலியில் முன்பள்ளி ஆரம்பிக்கக் கோரிக்கை

தென்மராட்சி,ஒக்.31

மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள மிருசுவில் கெற்பேலி கிராமத்தில் இன்னமும் முன்பள்ளி ஆரம்பிக்கப் படவில்லை. இதனால் இப்பகுதி சிறார்களை தூர இடங்களுக்கு கொண்டுசெல்ல வேண்டியுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இடம்பெயர்வுக்கு முன்னர் இப பகுதியில் உள்ள சனசமூக நிலையமொன்றில் முன்பள்ளி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## வாராந்த நிகழ்வு

சண்டிலிப்பாய்,ஒக்.31

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமை தோறும் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் முற்பகல் 10.30 மணிக்கு "மனத்தின் கண் மாசிலனாதல்" என்ற பொருளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் ஐ.சண்முகலிங்கம் சொற்பொழிவாற்றுவார். (ஒ-135)

## புனரமைப்பு

கைதடி,ஒக்.31

இடப்பெயர்வினாலும், யுத்த நடவடிக்கைகளினாலும் செயற்படாதிருந்த கைதடி தெற்கு சனசமூக நிலையமும், மின்னொளி விளையாட்டுக் கழகமும் மீண்டும் புனரமைக்கப்பட்டு, இயங்கி வருவதாக நிலையத்தின் செயலாளர் பொன்.செல்வராஜா தெரிவித்தார். (ஒ-75)

## 2000ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு

கசிப்பு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 2000 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு 45ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்த வேண்டும் அல்லது 3 வருட கடுழியச்சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என யாழ்.நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்ற இந்த வழக்கின் தீர்ப்பை நேற்று முன்தினம் யாழ்நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி.ச.இளங்கோவன் வழங்கினார். அச்செழு, பூலசிட்டியைச் சேர்ந்த நபரே இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். (ஒ-10)

## குருநகரில் இரவு நேர பாடசாலை

குருநகர்,ஒக்.31

குருநகரில் இயங்கும் அறிவகம் அமைப்பின் ஆதரவுடன் குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத்தில் இரவு நேரப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்ஆரம்ப வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் அறிவகம் அமைப்பின் இயக்குநர் சேவியர் சுவைன்ஸ் தலைமையில் நடைபெற்றது.

வாரத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை தரம் 4 தொடக்கம் தரம் 10 வரையிலான மாணவ - மாணவியருக்கு இலவசக் கற்பித்தல் வகுப்புகள் இங்கு நடைபெறும். இவ்வகுப்புகள் குருநகர் தொடர்மாடியில் வசிக்கும் வசதி குறைந்த பிள்ளைகளின் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. (ஒ-51)


**ராஜா** யாழ்ப்பாணம்.

விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
**யூத்** (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)
அனைவரின் வேண்டுகோளுக்கு இணங்க யூத் நீடிக்கப்பட்டுள்ளது.

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

எம்.ஜீ.ஆர்., சரோஜாதேவி, நம்பியார், நாகேஸ் நடித்த
**கலங்கரை விளக்கம்** (கலர் ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.45, 6.00

**நாகம்ஸ்** சுன்னாகம்

சூர்யா, ஸ்ருதிகா, விஜயகுமார் நடித்த
**ஸ்ரீ**
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)


# தாதிமார் நாளை முதல் இரவு சேவை இல்லை!

கொழும்பு,ஒக்.31

நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் தாதிமார்கள் நாளை முதல் இரவு நேரச்சேவையில் ஈடுபடமாட்டார்கள். அவர்கள் பகலில் 8 மணி நேரச்சேவையில் மட்டுமே ஈடுபடுவார்கள்

அரசாங்க ஐக்கிய தாதிமார் சங்கத்தின் தலைவரான முருத்தெட்டுவே ஆனந்ததேரர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

தாதிமாரின் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படாததை ஆட்சேபித்தே அந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறுகிறார்.

பொறளை சிறுவர் வைத்தியசாலை, காசல் வைத்தியசாலை, டி சொய்ஸா வைத்தியசாலை, மஹரகம வைத்தியசாலை ஆகியவற்றில் மட்டும் வழமைபோன்று சேவைகள் நடைபெறும். (ம)

# சம்மாந்துறை சமாதானச் செயலக பெயர்ப்பலகை அடித்து நொறுக்கல்!

அம்பாறை,ஒக்.31

சம்மாந்துறை சமாதானச் செயலகத்தின் பெயர்ப்பலகை இனந்தெரியாத நபர்களினால் அடித்து நொறுக்கப்பட்டது.

இச்செயலகத்தின் நடவடிக்கைகள் மீது பொது மக்கள் அதிருப்தியடைந்திருக்கும் நிலையிலேயே செயலகப் பெயர்ப்பலகை உடைக்கப்பட்டிருக்கிறது. இச்செயலகத்தில் பொதுமக்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகள் ஆராயயப்படுவதில்லை என்று கூறப்படுகிறது.

கடந்த ஞாயிறன்று இப்பிரதேச இளைஞன் ஒருவன் கடத்தப்பட்டு தாக்கப்பட்டார். இதுகுறித்து செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. ஆயினும், இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

சம்மாந்துறை சமாதானச் செயலகத்தில் 14பேர் கொண்ட ஒரு குழுவின் பணியாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் இலங்கை துறைமுக அதிகார சபையின் நிரந்தர ஊழியர்களாவர். இவர்கள் செயலகத்திற்கு தினசரி கடமைக்கு வருவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## பாலன் அருணகிரிநாதன்

கோண்டாவில், தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலன் அருணகிரிநாதன் (முன்னாள் ஏரிக்கடை உரிமையாளர்) நேற்று (30.10.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலன் - முத்தி தம்பதிகளின் அன்பு மகனும் அன்னம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சரவணை சின்னம்மாவின் மருமகனும் மணிமகுலன், குயிலாதேவி, ஜெயகௌரி (ஜேர்மனி), உதயச்சந்திரன் (யாழ்.மாநகர சபை), வக்சலா, வசந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இலக்கணகுமார் (யாழ்.பல்கலைக் கழகம்), கமலநாதன், இராசகுமார் (ஜேர்மனி), புவனேஸ்வரி, சத்தியராணி ஆகியோரின் மாமனாரும் பிரதீபா, தனேஸ்குமார், சாந்தரூபி, தனஞ்ஜெயம் (ஜேர்மனி), றேமினா (ஜேர்மனி), கபிசனா (ஜேர்மனி), கஜரூபி, சிந்துஜா, தருஜன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2002) வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தில்லையம்பதி,*
*கோண்டாவில்* (10100)

தகவல்:
அ.வசந்தன்
(மகன்).

## முத்துக்குமாரு சண்முகசுந்தரம்

(முன்னாள் கிராம அதிகாரி)

புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வவுனியாவைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரும் புத்தூர் கிழக்கு முன்னாள் கிராம அதிகாரியும் முத்துக்குமாரு - அபிராமிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனுமாகிய சண்முகசுந்தரம் அவர்கள் 28.10.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம்-செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் ராஜராசேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கருணைராஜ் மற்றும் பகீரதன், சரோஜினி, சரஸ்வதி, பாலச்சந்திரன், கீதாஞ்சலி, சகுந்தலை, சித்திரா, கனகசபை, ராஜ்குமார், சோபனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானசம்பந்தன், கவிதா, சிற்றம்பலம், வைத்தீஸ்வரநாதன், பஞ்சநாதன், ஸ்ரீகாந்தன், விஜித்தா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2002) வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு வவுனியா (35,குடியிருப்பு) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வவுனியா.* (10101)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி பார்வதிப்பிள்ளை சின்னத்தம்பி

கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பார்வதிப்பிள்ளை சின்னத்தம்பி நேற்று (30.10.2002) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிநாதர் - சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), கதிர்காமநாதன் (கூட்டுவில்லி தோட்டம், அக்கரபத்தனை), யோகநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற மாணிக்கவாசகர் மற்றும் சண்முகநாதன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மன்னார்) ஆகியோரின் அருமைத் தாயாரும், தனபாலசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), குலசேகரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), இராசேஸ்வரி, நல்லைநாயகி (ஓய்வு பெற்ற ஆசிரியை), யோகேஸ்வரி (ஆசிரியை, மன்னார்) ஆகியோரின் அன்பு மாமியும் செல்லநாயகம், அமரர் கனகரத்தினம் தெய்வானைப்பிள்ளை மற்றும் சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் அமரர் காசி கந்தையா மற்றும் இராஜாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் கருணாகரன், கிரிதரன், சித்திரா, சசிதரன், கிருபாகரன், திலீபன், பிரபாகரன், கலாரூபி, மயூரன், துர்காதர்சினி, சிவஜனனி, ஸ்கந்தரூபன், கார்த்திகா, ஜெயரூபி ஆகியோரின் பேர்த்தியும் விதுசனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2002) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் சுன்னாகம், கடவைப்புலம் சோதி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொல்லங்கலட்டி,*
*தெல்லிப்பழை.* (10115)

தகவல்
குடும்பத்தினர்.

# மாளிகாவத்தையில் பலத்த மோதல்: அடக்க கண்ணீர்ப் புகை; ஊரடங்கு!

## 18 பேர் காயம்; 13 வாகனங்கள் தீக்கிரை


மாளிகாவத்தையில் கட்டடம் ஒன்று நிர்மாணிப்பது தொடர்பாக இருசாராருக்கு இடையில் ஏற்பட்ட பலத்த மோதலில் 18 பேர் காயமடைந்தனர். அவர்களில் 4 பேர் ஆபத்தான நிலையில் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். 4 லொறிகளும் 9 ஓட்டோக்களும் தீக்கிரையாக்கப்பட்டன. 10 இற்கும் மேற்பட்ட வீடுகள், கடைகள் சேதமடைந்தன.

நேற்று நண்பகல் மோதல் ஏற்பட்டது. கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் அழைக்கப்பட்டது. மோதலில் ஈடுபட்டவர்களையும் ஆத்திரமடைந்து காணப்பட்ட மக்களையும் கலைப்பதற்கு பொலீஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். இறப்பர் ரவைகளைப் பயன்படுத்தி துப்பாக்கியால் சுட்டனர்.

அப்படியிருந்தும் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது பெரும் சிரமமாக இருந்தது. பொலீஸார் ஊரடங்கு உத்தரவையும் பிறப்பித்தனர். ஊரடங்கு உத்தரவு கொட்டாஞ்சேனை, தெமட்டக்கொட, புதுக்கடை, பாலத்துறை ஆகிய பகுதிகளிலும் விஸ்தரிக்கப்பட்டது.

நீதிமன்ற அனுமதியுடன் கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதே மோதல் வெடித்தது. ஜனாதிபதியின் உத்தரவிற்கிணங்க பொலீஸ்மா அதிபர் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளால் நிலைமை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது.

அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட ஒருவர் இறந்துவிட்டார் என்று பிந்திக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. (ம-4)



மாளிகாவத்தை போதிராஜ மாவத்தையில் நேற்று இடம்பெற்ற கலவரத்தின்போது வாகனம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.

### விசாரணை நடத்த ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,ஒக்.31

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலீஸ்மா அதிபர் ரி.ஆனந்த ராஜாவுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

நேற்றைய அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட இடங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி பொலீஸ்மா அதிபரை கேட்டுள்ளார்.

இதேவேளை -

நேற்று மாலை பொலீஸ்மா அதிபர் ரி.ஆனந்தராஜா தலைமையில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மேலதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று சம்பவ இடத்துக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டது. (ஐ-4)

## அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை பாங்கொக் போய்ச் சேர்ந்தனர். அரசாங்கக் குழுவுக்கு தலைமை தாங்கும் அமைச்சர் ஜீஎல். பரிஸும் நேற்று அங்கு போய்ச்சேர்ந்தார்.

அமைச்சர் பீரிஸுடன் செல்லவிருந்த அமைச்சர்களான மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் ஆகிய இருவரும் இறுதி நேரத்தில் பயணங்களைப் பின்போட்டனர். அமைச்சர் ஹக்கீம் கட்சியின் அரசியல்பீடக் கூட்டத்தில் கலந்துகொள்ளவிருந்ததாலும் பிரதமர் ரணிலை மீண்டும் சந்திக்கவிருந்ததாலும் பயணத்தைப் பின்போட்டார்.

இவர்கள் இருவரும் அதிகாலையே பாங்கொக் பயணமானார்கள். அங்கு அவர்கள் அரசாங்கக் குழுவுடன் சேர்ந்து கொள்வர். இக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் நேற்று முன்தினமே பாங்கொக் போய்ச் சேர்ந்து விட்டமை தெரிந்ததே.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனும் இன்றே பாங்கொக் போய்ச் சேர்வார் எனத் தெரிகிறது.

நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், தூதரக அதிகாரிகளான ரோமஸ் ஸ்ரொங்லண்ட், லிஸா கோல்ட் ஆகியோரும் பாங்கொக் போய்ச் சேர்ந்திருக்கின்றனர்.

சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் காட்டன் ஹோட்டலின் பாதுகாப்பை தாய்லாந்து, விசேட பொலீஸார் ஏற்றிருக்கின்றனர். சுமார் 70 ஏக்கர் காணியில் இந்த உல்லாச ஹோட்டல் அமைக்கப்பட்டிருக்கிறது. (ம-4)


இச்சலுகை 30.11.2002 வரை மாத்திரமே

ஸ்ரீ விநாயகரின் தீபாவளிச் சலுகை

| | | |
|---|---|---|
| ஒலிநாடா பாடல் பதிவுகளுக்கு (கஸட்டுடன்) | ~~[illegible]~~ | 90.00 |
| CD பாடல் பதிவுகளுக்கு (CDயுடன்) | ~~[illegible]~~ | 75.00 |
| MP3யில் பாடல் பதிவுகள் | ~~[illegible]~~ | 200.00 |
| V.H.S ஒளிநாடாவிலிருந்து CD மாற்றல் (3 hours) | ~~[illegible]~~ | 400.00 |

ஸ்ரீ விநாயகர், வழக்கம்பரை, பண்ணாகம் சுழிபுரம். (10036)



இயற்கை மூலிகை மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல்பருமன், சலரோகம், முகப்பரு, மூலம், இளநரை, தலைமுடி கொட்டுதல், தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எவ்வித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக; குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக் குறைவு, குழந்தை பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

Dr.R.K.நவனீதன் DYNS:SMP:NC

(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)

இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ். உல்லாச பயணியர் விடுதி (வெலிங்டன் சந்தி அருகில்), யாழ்ப்பாணம்.

முந்துங்கள்! மருத்துவ முகாம் ஐந்து நாள்கள் மட்டுமே நடைபெறும்.

மருத்துவ முகாம் நடைபெறும் நாள்கள்: ஒக்ரோபர் 30, 31 மற்றும் நவம்பர் 1,2,3,4ஆம் திகதிகளில்.

(10088)


## வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவிராஜ், ஜி.ஜி.கஜேந்திரகுமார் ஆகியோரும் பேரணியில் கலந்து கொண்டனர்.

இறுதியில் நடந்த பொதுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகத் தலைவர் எஸ்.பரமநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

தமது சொந்த இடங்களில் தம்மை மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரும் வலி. வடக்கு மக்கள் சார்பான மகஜர்கள் யாழ். அரச அதிபரிடமும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு யாழ். அதிகாரியிடமும் கையளிக்கப்பட்டன.

*(பேரணி தொடர்பான மேலதிக செய்திகளும் படங்களும் 11 ஆம் பக்கத்தில்)* (ம-3-8-86)

## மூன்றாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதுகின்றது. இதுவிடயம் நோர்வே தரப்புக்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் மூன்றாவது சுற்றுப் பேச்சை தாய்லாந்திலேயே நடத்துவதாயின் அதனை ஒத்தி வைத்து பிறிதொரு தினத்தில் நடத்தவேண்டியிருக்கும். ஆனால், சமாதானப் பேச்சு அதன் ஒழுங்கில் நடப்பதையே நோர்வே விரும்புகிறது. எனவே, மூன்றாவது சுற்றுப் பேச்சை ஒத்திவைப்பதை நோர்வே தரப்பு விரும்பவில்லை என்று தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் டிசெம்பர் பேச்சுக்களை தாய்லாந்துக்கு வெளியே திட்டமிட்டவாறு நடத்த நோர்வே விரும்புகிறது. பொருத்தமான வேறு இடத்தை தெரிவுசெய்வதில் பிரச்சினைகள் இருப்பதால் மூன்றாவது சுற்றுப் பேச்சை தனது நாட்டில் நடத்துவதற்கு நோர்வே சமாதானக்குழு உத்தேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

- இவ்வாறு ஒஸ்லோ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)


வெளிவந்து விட்டது!

தரம் 09 மாகாண மட்டப் பரீட்சை

முற்றிலும் எதிர்பார்க்கை வினாத்தாள்கள் விடைகளுடன் (சகல புத்தகசாலைகளிலும்)

(10089) வெளியீடு IPE


# தீபாவளியை முன்னிட்டு ஏ-9 வீதியை 24 மணிநேரமும் திறக்க வேண்டுகோ[ள்]

## இந்து கலாசார அமைச்சு விடுத்த[து]

தீபாவளி தினத்தையொட்டி பெருந்தொகையான இந்துக்கள் வடபகுதிக்கு பிரயாணம் மேற்கொள்ளவுள்ளதால் அவர்கள் செல்லும் வன்னிப் பகுதியில் அமைந்துள்ள அதாவது வவுனியா, ஓமந்தை, முகமாலை ஆகிய இடங்களிலுள்ள இராணுவப் பரிசோதனைச் சாவடிகளைப் பொது மக்கள் தடையின்றிச் செல்வதற்கு நவம்பர் 3ஆம் திகதியிலிருந்து 5ஆம் திகதிவரைக்கும் முழுமையாகத் திறந்துவிடுமாறு இலங்கை இராணுவத் தளபதியை இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு கேட்டுள்ளது.

தீபாவளி தினத்தை சிறப்புட[ன்] கொண்டாடுவதற்குப் பெருந்தொ[கை]யான மக்கள் அவ்வழியால் செல்[ல]வுள்ளனர். இப்பாதைகளை முழு[மை]யாகத் திறந்துவிடுவதன் மூலம் ம[க்]கள் இலகுவாகச் செல்வதற்கு வ[ழி]யாக இருக்கும்.

அதேவேளை, அன்றைய தி[ன] மதுபானக் கடைகளை ... விற்பனை செய்யும் கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமா[று] இந்துசமய விவகார அலுவல்க[ள்] அமைச்சு, நீதி அமைச்சை[க்] ... யுள்ளது.

## முஸ்லிம்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகள் உள்ளன. அவர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும். அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். கலாசாரப் பாரம்பரியங்கள் பேணப்படவேண்டும். அவர்களின் பொருளாதார வாழ்வு மேம்படுத்தப்படவேண்டும். அவர்களின் பிரச்சினைகள் நிச்சயமாக தீர்க்கப்படவேண்டும்.

பேச்சின் உரிய கட்டத்தில் - அடிப்படை விடயங்கள் எடுக்கப்படும்போது - முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்தும் ஆலோசிக்கப்படும் அரசு, புலிகள்,முஸ்லிம் தலைவர்கள் என்ற முத்தரப்பினரும் சேர்ந்து இதனைச் செய்யவேண்டும்.

இந்த ஆரம்பக்கட்டத்தில் அவசரப்படாமல் அமைதியாக இருந்து-முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் எடுக்கப்படுகின்ற நேரத்தில் - ஒட்டு மொத்தமாக முஸ்லிம்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் கோரிக்கைகளை முஸ்லிம் தலைவர்கள் முன்வைத்து, எங்களுடனும் அரசுடனும் பேச்சு நடத்தி உரிய தீர்வு காணவேண்டும். அதுவே எமது விருப்பம்.

இப்போது இத்தகைய குழப்ப நிலையை ஏற்படுத்துவது அவசியமான ஒன்றல்ல. இதைத் தவிர்த்துக் கொள்வதற்கு அவர்கள் முயற்சி செய்யவேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படுத்தப்படமாட்டாது. முஸ்லிம்களைப் புறந்தள்ளி விட்டு எந்தத் தீர்வும் நாம் காணப் போவதில்லை. முஸ்லிம் மக்களுடன் இணைந்து, அவர்களுடன் கலந்து பேசி, இணக்கம் கண்டே ஒரு தீர்வுத் திட்டத்தை நாம் முன்னெடுக்க இருக்கின்றோம்.

முஸ்லிம் மக்கள் அஞ்சத் தேவையில்லை. முஸ்லிம் தலைவர்களும் வீணாகப் பீதி கொள்ளத் தேவையில்லை. எங்களுடனும் அரசுடனும் சமரசமாகப் பேசி தீர்வு காணும் நல்ல தொரு புறநிலை ஆக... அவர்கள் ஏற்படுத்த முன்வர... டும்.

இப்போது முஸ்லிம் தலை... ஏற்படுத்தும் சலசலப்பு உ... முஸ்லிம் மக்களின் ஆதங்க... விளைவு அல்ல. ஒரு கட்சிக்கு... வும் தலைமைத்துவ அல்ல... கரப் போட்டியின் பிரதிபலி... பதே எனது எண்ணம்.

தமிழ் மக்களின் பிர... னைக்கான தீர்வின் ஒரு ... லிம் மக்களுடனும் சம்ப... றது. அதனால் தமிழ் மக்க... சினைகளுக்குத் தீர்வு கா... போது முஸ்லிம் மக்களுக்... வும் காணப்படவேண்டி...

அதற்கான ... இப்போது ஆரம்பிக்... றன. 'இதைத் தா... 'உறுதிப்படுத்துங்க... டனம் செய்யுங்கள் ... தனை விதிப்பது போ... முன்னர் கோரிக்கைகளை... பது பொருத்தமற்றது: ... நியாயப்படுத்த முடியா... பிரச்சினையை அவர்கள்... அது பொருத்தமாக ...

(உதயனுக்கு வழங்கி... யேகப் பேட்டியில் பாலா ... மற்றும் விவரங்கள் 2 ஆ... தில்)

## ஒஸ்லோ...

(முதலாம் பக்கத் தொ...)

ஆராய்ந்து தீர்மானம் மேற்... படும்.

புலிகள் இயக்க அரசிய... பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், ... மாகாண சிறப்புத் தளபதி ... கருணா ஆகியோர் பேச்சுக்... கலந்து கொள்வதால் கிழக்கு மா... நிலைமை குறித்தும் ஆராய ... பம் கிடைத்திருக்கிறது" - இவ்... அவர் மேலும் கூறினார். (ப...)


NEW SCIENCE COLLEGE

பௌதிகவியல் A/L 2003

சடமும் கதிர்ப்பும் RADATION

சனி, ஞாயிறு 8.00 - 9.30 a.m.

ஆரம்பம் 02.11.2002

A/L 2004

மின்னியல் (ELECTRICITY)

செவ்வாய், வெள்ளி 6.00 - 7.15 p.m (இரவு நேர வகுப்பு)

ஆரம்பம் 01.11.2002

by. R.குகன் (B.Sc.)

(10097)



ITN தீபாவளி மலிவு விற்பனை ITN தீபாவளி மலிவு விற்பனை

இதோ ITN தீபாவளி மலிவு விற்பனை!

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நவம்பர் 4 வரை

புதிய, பழைய வீடியோ, ஓடியோ CDகள் மற்றும் இந்து - கிறிஸ்தவ பக்திப்பாடல்கள் MP-3 CDகள் அண்மையில் வெளியான கர்நாடக சங்கீதம் CDகள் அனைத்தும் மலிவுவிலையில் கிடைக்கும்.

☛ தீபாவளி நாள் வரையும் பாடல் பதிவுகளுக்கு 10% கழிவு வழங்கப்படும்.

இன்றே விரையுங்கள்! தாமதம் வேண்டாம்!!

ITN வீடியோ ஓடியோ மியூசிக் சென்ரர்

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம். (10089)

ITN தீபாவளி மலிவு விற்பனை ITN தீபாவளி மலிவு விற்பனை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.